Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள


கணேசா நகையகம்

194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 24 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 30 (08.07.2005) வெள்ளிக்கிழமை இதழ்:282

# சமாதானப் பேச்சுக்கான வாய்ப்பு இப்போது கிடையவே கிடையாது!

## அடித்துச் சொல்கிறார் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி ———

போர்நிறுத்த உடன்பாடு மிகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள - சமாதான முன்னெடுப்புக்களுக்கான சாத்தியமே இல்லாத இந்த நிலை யில் - மீண்டும் சமாதான முயற்சிகளில் கவனம் செலுத்துவதென்பது அர்த்தமற்ற நடவடிக்கையா கவே இருப்பதாக - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் 'நமது ஈழநாடு'வுக்கு நேற்று அளித்த பிரத்தியேக செவ்வியில் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டதும் - நோர்வே அனுசரணையாளர்கள் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான முயற்சிகளில் இறங்கியிருப்பதாகக் கூறப்படுவது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்பது ஒரு அர்த்தமில்லாத - நடைமுறைக்குச் சாத்தியமில்லாத முயற்சியாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதனின் வயிற்றில் 15 அடி நீள நாடாப்புழு!

கொழும்பு ———

இலங்கையில் நோயாளி ஒருவரின் வயிற்றில் இருந்து 15 அடி நீளமான நாடாப்புழு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் வசிக்கும் மியன்மார் நாட்டைச் சேர்ந்த ஒருவரின் வயிற்றில் இருந்தே இந்தப் புழு கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் புழுவின் பாகங்கள் தற்பொழுது வைத்திய பரிசோதனைகளுக்காக சோதனை நிலையம் ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் நாடாப்புழு நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## 3 ஊர்காவல் படையினரும் ...

## லண்டனில் தொடர் குண்டுவெடிப்புகள்

## 40 பேர் வரை பலி-700 பேர் காயம்!




லண்டன் ———

லண்டனின் போக்குவரத்து அமைப்பை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுத்

## கருணா குழு உறுப்பினர் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு ———

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

தியாவெட்டுவானைச் சேர்ந்த செல்வராஜா ரஜிந்தன் (வயது 27) என்ற - கருணா குழு உறுப்பினரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தியாவெட்டுவானில் உள்ள தனது வீட்டில் இரவு உணவை உண்டுவிட்டு வெலிக்கந்தவில் உள்ள மறைவிடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது - இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பாலைநகர் காட்டுப் பகுதியில் வைத்து இவரை வழிமறித்த நபர்கள் ரி.56 ரகத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 3 ஊர்காவல் படையினரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைப்புறத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள், தடைசெய்யப்பட்ட பாதை ஊடாக பிரவேசித்து நடமாடிய குற்றச்சாட்டின் பேரில், விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிங்கள ஊர்காவல் படைவீரர்கள் மூவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

பக்கியல்லவைச் சேர்ந்த சோனாறு முதியன் சலாகே சமிந்த (வயது 24), சூரியப்பெரும் ஆராச்சிகே ஜானக பிரதீப்குமார (வயது 22) மற்றும் அத்த நாயக்க முதியன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முத்தலிப் கொலை: 6 சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல்!

கொழும்பு —

இராணுவ புலனாய்வு அதிகாரியான லெப். கேணல் நிசாம் முத்தலிப்பின் கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறு பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏ.எஸ்.குமாரி எனப்படும் றஜனி (கோப்பாய் மத்தி), ஆர்.சரஸ்வதி எனப்படும் உமா (இரத்மலானை), ஆர். எம்.சியாமளி (வெலிக்கந்த), எஸ். சரோஜா (கொஸ்வத்த), எம்.ஏ.எம். ரிஸ்வான் (மாளிகாவத்த) மற்றும் ஈ. மே.கருணாரட்ண அல்லது ஏ.தேசப் பிரிய (இரத்மலானை) ஆகியோரே குறிப்பிட்ட சந்தேகநபர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

லண்டன் —

லண்டனின் போக்குவரத்து அமைப்பை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், 700 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற இந்தக் குண்டு வெடிப்புகள், போக்குவரத்து நெரிசல் மிகுந்த அலுவலகப் பயண நேரத்தில் இடம்பெற்றன.

இந்தக் குண்டுத் தாக்குதல்கள் மூன்று லண்டன் பாதாள (12 ஆம் பக்கம் பார்க்க)

## 4 ஈழத் தமிழர்களும் லண்டனில் காயம்!

லண்டன் —

லண்டனில் நேற்று நடைபெற்ற குண்டு வெடிப்புக்களில் நான்கு ஈழத் தமிழர்கள் காயமடைந்தமை உறுதிசெய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பலர் இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. எனினும் பாதிக்கப்பட்டோர் குறித்த உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை, லண்டனில் குண்டுவெடிப்பு இடம்பெற்றமை குறித்து தகவல் வெளியானதையடுத்து யாழ். குடாநாட்டிலுள்ள அனேகமான வெளியூர் தொலைத்தொடர்பு நிலையங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததை காணக்கூடியதாகவிருந்தது.

தமது உறவினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கப்டனுக்கு பணம் கொடுத்து இரகசியங்களைப் பெற புலிகள் முயற்சி?

### கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு

கொழும்பு —

முன்னாள் இராணுவத் தளபதியின் மகனான கப்டன் தர அதிகாரியொருவருக்கு 50 லட்சம் ரூபா கொடுத்து இராணுவத்தின் மோட்டார் படையணியின் அனைத்து இரகசிய தகவல்களையும் விடுதலைப் புலிகள் பெற்றுக்கொள்ள இருந்தமை பற்றிய தகவல்கள் - லெப்.கேணல் முத்தலிப்பின் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மூலம் தெரியவந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

லெப்.கேணல் முத்தலிப் கொலை தொடர்பாக பண்டாரகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கியஸ்தராக கூறப்படும் ராஜன் மற்றும் அவருக்கு உதவிய சிங்கள வர்த்தகர் ஆகியோர் மேற்படி (12 ஆம் பக்கம் பார்க்க)

கியால் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் திருகோணமலைக்கு விஜயம்!

திருகோணமலை —

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் நேற்று திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டு படையதிகாரி கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் திருகோணமலைக்குச் சென்ற அவர், முதலில் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருடன் சந்திப்பினை மேற்கொண்டார். பின்னர் 10.30 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற பிரதேசத்தினுள் டக்ளஸை கொல்ல முயற்சியாம்

கொழும்பு —

ஈ.பி.டிபியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை கொலை செய்வதற்காக - விடுதலைப் புலிகளின் குழுவொன்று கோட்டை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி அமைந்துள்ள பிரதேசத்திற்கு வந்துள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் அந்தப் பிரதேசத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் மூவர் கொண்ட குழுவினர் நீலநிற செரீனாரக வானொன்றில் கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு 5 ஆம் திகதி புறப்பட்டதாக இராணுவ உளவுப் பிரிவுக்கு தகவல் கிடைத்ததாகவும், இதற்கமைய நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி (12 ஆம் பக்கம் பார்க்க)



# பண்டிதர் வீ.பரந்தாமனின் நூல் வெளியீட்டு விழா!




பண்டிதர் வீ. பரந்தாமனின் 'வேர் - அடி வழித் தமிழ்ச் சொற்பியற் சிற்றகர முதலி' நூல் வெளியீட்டு விழா நாளை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரேற்றல், கொடியேற்றல், அகவணக்க நிகழ்வுகளைத் தொடர்ந்து வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.ரகுநாதனும், வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தலைமையுரையைத் தொடர்ந்து வெளியீட்டுரையை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்துவார். அறிமுகவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசு, பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்துவர். ஏற்புரையை பண்டிதர் வீ.பரந்தாமன் நிகழ்த்துவார்.

## தேசிய கலை இலக்கியப் பெருவிழா

யாழ்ப்பாணம் —

தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலாசார சபை நடத்தும் தேசிய கலை இலக்கியப் பெருவிழா, நாளை காலை 9 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக மேலதிக யாழ். மாவட்டச் செயலாளர் (நிதி) எஸ்.சண்முகரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரப்பிள்ளை, வலி. மேற்கு பிரதேச செயலாளர் ஏ. மோகன்றாஸ், வலி. வடக்கு உதவிப் பிரதேச செயலளர் சு.முரளிதரன் மற்றும் இலங்கை வங்கி வட பிராந்திய முகாமையாளர் அ.பாலசுப்பிரமணியம், ஊர்காவற்றுறை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.ஈழமாறன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# உள்ளூராட்சி வாரநிகழ்வு திகதிகள் மாற்றம்

2005 ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி வார நிகழ்ச்சிகள் நடைபெறும் தினங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதிவரை உள்ளூராட்சி வார நிகழ்வைக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், மகாண உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் இந்த நிகழ்ச்சிகள் எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி மாற்றங்களுக்கு அமைவாக தங்களின் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்துக்கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார். (63)



# நூல் வெளியீடு



**பண்டிதர் வீ.பரந்தாமனின்**

**வேர் - அடி வழித் தழிழ்ச் சொற்பிறப்பியற் சிற்றகர முதலி**

| | |
|---|---|
| இடம் | : கைலாசபதி கலையரங்கு. யாழ்ப்பாண பல்கலைக்கழகம். |
| காலம் | : 2005.07.09 |
| நேரம் | : காலை 9.00 மணி |
| தலைமை | : முனைவர் சி.சிவலிங்கராஜா, தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

**நிகழ்ச்சி**

| | |
|---|---|
| பொதுச்சுடரேற்றல் : | |
| கொடியேற்றல்: | |
| அகவணக்கம்: | |
| வரவேற்புரை | : **முனைவர் மா.இரகுநாதன்** முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம். |
| வாழ்த்துரை | : **பேராசிரியர் சு.மோகனதாஸ்** துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம். **பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்** கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம். |
| தலைமையுரை | |
| வெளியீட்டுரை | : **திரு.சி.இளம்பரிதி** பொறுப்பாளர், அரசியற்துறை, யாழ்.மாவட்டம். |
| அறிமுகவுரை | : முனைவர் **மனோன்மணி சண்முகதாஸ்.** |
| மதிப்பீட்டுரை | : முனைவர் **செல்லையா திருநாவுக்கரசு** முதுநிலை விரிவுரையாளர், ஆசிரியர்கலாசாலை, கோப்பாய். **பேராசிரியர் அ.சண்முகதாஸ்** |
| ஏற்புரை | : **பண்டிதர் வீ.பரந்தாமன்.** |
| நூல் வழங்கல் | : |
| நன்றியுரை | : **திரு ஈ.குமரன்** விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம். |

**தென்புலோலி (இலங்கை)யைச் சேர்ந்த பண்டிதர் வீ.பரந்தாமன் என்பவர் இதற்கு உழைத்திருப்பதைப்போல் வேறு எவராவது உழைத்துத் தமிழுக்குப் பங்களித்திருப்பீர்களா என்பதுதான் ஐயம். வடசொற்களில் உள்ள தமிழ் மூலத்தை முதல் உரைத்தவர்கள் ஞானப்பிரகாசமும், பாவாணரும். இவர்கள் வழிநின்று பல தமிழ்ச் சொற்களை மீட்டுத்தந்திருப்பவர் பண்டிதர் பரந்தாமன். ஒன்றிரண்டல்ல நூற்றுக் கணக்கான வடசொற்களுக்குத் தமிழே மூலம் என்பதை நல்ல இலக்கிய எடுத்துக் காட்டுகளுடன் தந்திருக்கிறார். கண்களைத் திறக்கும் நூல்.**

லேனா தமிழ்வாணன்
(குமுதம் 2005.05.23)

**இந் நிகழ்விற் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி-4272) - தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த

ஜித்தன்



பஸ் போக்குவரத்துபாதை
இல 787 - காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த

சந்திரமுகி



பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

விஜயசாந்தி, சுஜாத்தா, லக்ஷ்மி நடித்த

சூர்யா

காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சத்தியராஜ், சுனிதாவர்மா வடிவேல் நடித்த

6.'2"



வெகு விரைவில்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

சின்னா

காட்சிகள் : 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

3 ஆவது ஜனத்திரள் வாரமாக

சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்

அந்நியன்
anniyan



இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30


## யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட

# உள்ளக கலையரங்க நிர்மாண பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 15 இற்குள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம் —

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உள்ளக கலையரங்கின் நிர்மாணப் பணிகளை ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் ஆரம்பிக்கப் போவதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மருத்துவபீட மாணவர்களிடம் உறுதியளித்தார்.

மருத்துவபீட மாணவர்கள் மேற்படி கலையரங்கின் புனரமைப்புப் பணிகள் பத்து வருடமாக மேற்கொள்ளப்படவில்லை என கோரிக்கை விடுத்தும், தமது பீடத்தினுள் உள்ளக கலையரங்கின் நிர்மாணப் பணிகளை உடன் ஆரம்பிக்குமாறும், நேற்றுமுன்தினம் துணைவேந்தரின் அலுவலகத்தின் முன் நண்பகல் சுமார் இரண்டுமணி நேரம் மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என துணைவேந்தர் உறுதியளித்துள்ளார். இதேவேளை, ஓகஸ்ட் 15 ஆம் திகதி உள்ளக கலையரங்கின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படாவிடின் தமது போராட்டம் தொடரும் என மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்..


**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0779122836
நேரம்:காலை9.00 - 8.30 வரை.(1198)



**பரிசுத்த ஆவிக்கு ஜெபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற் துணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வாறு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதிகூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

ஓ பரிசுத்த ஆவியானவரே உமக்கு
நன்றி

(1977) - யூட் சுதர்சன்


**நமது ஈழநாடு** — தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# ஊடக அனுசரணையுடன்



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விவாத மன்றம் நடாத்தும் மாபெரும் விவாத சுற்றுப் போட்டி

## 'விவாத மேடை - 2005'

**மேற்படி சுற்றுப்போட்டியானது யாழ். மாவட்டம் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே விவாதத்திறமையை வளர்க்கும் முகமாக ஜூலை மாதம் 11 ஆம் திகதி முதல் (11.07.2005) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.**

- இப்போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு வெற்றிக் கேடயமும், பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- இப் போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும்
  - *இளநிலைப் பிரிவு தரம் - 09, 10, 11*
  - *முதுநிலைப் பிரிவு தரம் - 12, 13*
- ஒவ்வொரு பிரிவிலும் 4 பேர் கொண்ட அணிகளே பங்குபற்றலாம்.
- பங்குபற்ற விரும்பும் அணிகள் போட்டி நடைபெறும் நாளன்று காலை 9 மணிக்கு பொறுப்பாசிரியர் சகிதம் யாழ். இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்கவேண்டும்.

**வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு பாடசாலையில் கல்வி பயில்பவராயினும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம்**

***நீங்கள் செய்யவேண்டியது -***

உங்கள் பெயர்களை பிரிவுரீதியாக பட்டியலிட்டு அதிபரது கையொப்பத்துடனான விண்ணப்பப்படிவங்களை ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சமர்ப்பிக்கவும். போட்டித் தலைப்புக்கள் - இலக்கிய, சமய, விஞ்ஞான, அரசியல் மற்றும் பொது விடயங்கள் சார்பாக அமைந்திருக்கும்.

**மேலதிக விபரங்களுக்கு :**

செந்தில்நாதன் சொபிசன் (ஒழுங்கமைப்பு குழுத் தலைவர்)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம். T.P : 077 - 6093093, 021 - 4591360

# மட்டக்களப்பை பின்தங்கிய மாவட்டமாக்க இணக்கம்!

கொழும்பு—

மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களை கல்வியியல் கல்லூரிகளில் சேர்க்கும்போது கல்வியில் பின்தங்கிய மாவட்ட மாணவர்களாகக் கருதவேண்டுமென்ற கோரிக்கைக்கு கல்வி அமைச்சால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், எஸ். ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், கனகசபை, கே.தங்கேஸ்வரி ஆகியோர் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் கல்வியமைச்சின் செயலர் தாரா டி மெல்லைச் சந்தித்து இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்தனர்.

இதனையடுத்து தற்சமயம் கோரப்பட்டுள்ள கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதியின் போது மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக ஏற்றுக்கொள்வதற்கு கல்வியமைச்சின் செயலர் இணக்கம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

ஏற்கனவே, பல்கலைக்கழக அனுமதியில் மட்டக்களப்பு மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(01)

# ஹெல உறுமயவை பற்றி விமர்சிக்க சோமவன்சவுக்கு அருகதையில்லை!

## ஓமல்பே சோபித தேரர் பாய்ச்சல்

கொழும்பு—

நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் எந்தவொரு பயனுமற்ற, கொள்கை இல்லாத கட்சிதான் ஜே.வி.பி. என்று ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய ஒரு பிற்போக்குவாதக்கட்சி. அது தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜனநாயக கோட்பாடுகள் இல்லாத கட்சி, அதனால் அதன் நிலைப்பாடுகளில் தெளிவில்லை எனக் கூறுவதற்கு ஜே.வி.பி. தலைவருக்கு எந்தவொரு அருகதையும் இல்லை.

சிங்களவர் இலங்கையின் வரலாற்று இனமாகவும், தமிழ், முஸ்லிம் இனங்கள் ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி சிறுபான்மை இனமாகவும் உரிமைகள் உள்ளதுடன் பௌத்தம் அல்லாத ஏனைய சமயங்களுடன் அவற்றைப் பின்பற்றக்கூடிய உரிமையும் உள்ளது.

ஜாதிக ஹெல உறுமய தற்போதுள்ள அரசியல் முறையை ஏற்றுக்கொண்டு அதனை ஜனநாயக முறையில் நடைமுறைப் படுத்தவே விரும்புகிறது.

மாக்ஸிச லிபரல்வாத கொள்கைகளைக் கைவிட்டு ஜனநாயக முறையில் வாக்களித்த பொது மக்களின் கை விரல்களை வெட்டியும், கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களின் அரசியல் கொள்கைகளைவிட உயரிய அரசியல் கொள்கையுடன் எமது கட்சியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.



# 5 மரண தண்டனை கைதிகளும் இந்த வாரம் மேன்முறையீடு!

கொழும்பு—

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உபாலி அமரசிங்க ஆகியோரைப் படுகொலைசெய்த குற்றச்சாட்டுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட நவ்பர் உட்பட ஐவரையும் விடுதலை செய்யுமாறுகோரி, இந்த வாரத்தினுள் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளதாக சட்டத்தரணி லக்ஸ்மன் பெரேரா தெரிவித்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பை வழங்கியது மேல்நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அடங்கிய குழுவென்பதால் மேன்முறையீட்டை உயர்நீதிமன்றத்திலேயே செய்யவேண்டும்.

இந்த வழக்கு விசாரணைகளில் சாட்சிகளின் சாட்சியங்களில் முரண்பாடு காணப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக்கறிஞர்கள் எழுத்துமூலம் நீதிமன்றத்திற்கு அறிவித்தபோதிலும்- தீர்ப்பு வழங்கியபோது நீதிபதிகள் அதுபற்றிக் கவனம் செலுத்தவில்லை.



அதனால் அவர்கள் ஐவரையும் விடுதலை செய்யுமாறுகோரி, தான் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்போவதாகவும் லக்ஸ்மன் பெரேரா மேலும் தெரிவித்தார்.

# தேசிய அடையாள அட்டை இனி வர்ணப்படத்துடன்!

கொழும்பு—

ஆட்பதிவுத் திணைக்களத்தின்மூலம் வழங்கப்பட்ட கறுப்பு, வெள்ளை அடையாள அட்டைகளுக்குப் பதிலாக வர்ண அடையாள அட்டைகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் எச்.கே.கீதசேன தெரிவித்தார்.

இந்த அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான விண்ணப்பப்படிவங்கள், கடந்த முதலாம் திகதி முதல், பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, விண்ணப்பப்படிவங்களை கிராம அலுவலர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கிரடிட் காட் போன்று இந்த அடையாள அட்டைகளை வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

புதிய வர்ண அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான இயந்திரங்களை வெளிநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

# பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கும் யோசனை தயாரிப்பு!

கொழும்பு—

பல்கலைக்கழக வலையின்னலில் அனைத்துத் தராதரங்களையும் சார்ந்த ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மத்தியிலான சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் வகையிலான யோசனைகள் அடங்கிய விசேட அறிக்கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்துள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும்.

தற்போது கடமைகளை பகிஷ்கரிக்கும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டு பிரச்சினைகளுக்கும் இந்த அறிக்கையில் தீர்வுக்கு முன்மொழியப்பட்டிருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# வவுனியா, மன்னார் மீள்குடியமர்வுக்கு அவுஸ்ரேலியா 320 மில்லியன் உதவி!

கொழும்பு—

உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காக மீள்குடியேற்றங்களை மேற்கொள்ள அவுஸ்ரேலிய அரசாங்கம் நிதியுதவியை வழங்கியுள்ளது.

இதன்படி 320 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கான ஒப்பந்தம் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரியும், நிதியமைச்சின் செயலரும் இதில் கைச்சாத்திட்டனர்.

இது தொடர்பாக நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மன்னார், வவுனியா பகுதிகளில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்பவர்களை மீள்குடியேற்றும் திட்டத்துக்கு அவுஸ்ரேலிய 320 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும், புனர்வாழ்வு அமைச்சும் இணைந்து இத்தத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன. குறிப்பிட்ட பிரதேசங்களின் அரசாங்க அதிபர்கள் இவற்றை அமுல்படுத்துவார்கள்.

தேசிய மட்டத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சமூகத்தினரையும் ஏனைய அமைப்புக்களையும் உள்ளடக்கிய திட்ட நெறிப்படுத்தல் குழுவொன்று ஏற்படுத்தப்படும்.

இது சம்பந்தமாக சகல தரப்பினர் மத்தியில் ஒருங்கிணைப்பு மற்றும் கொள்கை நெறிப்படுத்தலுக்குப் பொறுப்பாக விளங்கும். பிரதேச அளவில் சிவில் அமைப்புகள்ள உள்ளூராட்சி அமைப்புகளை, உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுவொன்று திட்ட அமுலாக்கலை மேற்பார்வை செய்யும்.

அரசாங்க அதிபர் இந்தக் குழுவுக்கு தலைவராக விளங்குவார். அவுஸ்ரேலிய அரசாங்கமும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் இது தொடர்பான உடன்பாட்டில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டதாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(01)

# முஸ்லிம்கள் கண்டனம்!

அம்பாறை—

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் இணைத்துக்கொள்ளப்படாமையானது, சிறுபான்மை இனத்திற்கு இரண்டாவது சிறுபான்மை இனத்தை அடிமையாக்கிய செயலாகும் என அம்பாறை அனைத்து பள்ளிவாசல்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் நிந்தவூர் ஜ-அம்மா பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்தில்இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பொதுக்கட்டமைப்பானது முஸ்லிம்களை நிர்க்கதியாக்கும் என்பதால், அனைத்து முஸ்லிம் தரப்பினரும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என இங்கு வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் இன்றைய தினத்தை சுனாமி பேரலைக்கான முஸ்லிம்களின் எதிர்ப்பு தினமாகப் பிரகடனம் செய்வதென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# பொதுக்கட்டமைப்புக்கு இடைக்காலத் தடை விதிப்பதற்கு உயர்நீதிமன்றம் மறுப்பு!

கொழும்பு—

சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிரதம நீதியரசர் தலைமையிலான மூவரைக்கொண்ட நீதியரசர்கள் மனுவை விசாரணைக்கு எடுக்கத் தீர்மானித்தனர்.

இதன்படி எதிர்வரும் 12 ஆம் திகதி இந்த மனு மீதான விசாரணை நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, மனுதாரர் மனுவில் கோரப்பட்டிருந்தபடி பொதுக்கட்டமைப்பு மீதான இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பிக்கமுடியாது என பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பானது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வடக்கு - கிழக்கு பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள மக்களுக்காகவே அமைக்கப்பட்டது. அதனை ஏன் எதிர்க்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார் பிரதம நீதியரசர்.

இதற்குப் பதிலளித்த மனுதாரர்களின் சட்டத்தரணிகள் - பொதுக்கட்டமைப்பானது தனிநாட்டுக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்டதுடன், சட்டவிரோதமான முறையில் செய்யப்பட்டமை காரணமாகவே அதனை எதிர்ப்பதாகத் தெரிவித்தனர்.

தாம் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு எதிரானவர்கள் அல்லர் என்றும் மனுதாரர் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

(01)

# கொழும்பில் போலி அடையாள அட்டையுடன் இளம்பெண்ணும், கிராம அலுவலரும் கைது!

கொழும்பு—

போலி அடையாள அட்டையுடன் தமிழ்ப் பெண் ஒருவரும், அவருக்குதவிய கிராம அலுவலரும் கொழும்பில் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பில் மரணமான ஒரு பெண்ணின் பெயரில் அடையாள அட்டை தயாரித்து அந்த அடையாள அட்டையுடன் கொழும்பு - கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் சந்தேகத்திற்கு கிடமான முறையில் நடமாடியபோதே மேற்படி பெண் கைதுசெய்யப்பட்டார்.

பெண்ணையும், அவருக்கு அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள உதவியதாகக் கூறப்படும் கிராம அலுவலரையும் எதிர்வரும் 19 திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை மேலதிக நீதிவான் சரத் சி.கருணாரட்ன உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு -செங்கலடியைச் சேர்ந்த வீரமுனி தயாபாலனி மற்றும் இரத்தினசிங்கம் இரத்தினகுமார் ஆகிய இருவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இப்பெண்ணை கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவரிடம் சோதனையிட்ட பொலிஸார் இவரிடமிருந்து பெறப்பட்ட அடையாள அட்டையைப் பரீட்சித்துப் பார்த்ததில் சில வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்த பெண் ஒருவரின் பெயர் விபரங்களுடன், சந்தேகத்திற்கிடமான பெண்ணின் புகைப்படம் இணைக்கப்பட்டு அடையாள அட்டை தயாரிக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர்.

குற்றப்புலனாய்வுப்பிரிவிடம் இந்தப் பெண் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய இந்த அடையாள அட்டை தயாரிக்க உதவிய கிராம அலுவலரையும் குற்றப் புலனாய்வு பொலிஸார் கைது செய்தனர்

இவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக குற்றப் புலனாய்வு துறையினர் தெரிவித்ததனால், சந்தேக நபருக்கு பிணை வழக்கு மறுத்த நீதிவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# கம்பு ஊன்றிப் பாய்தல் போட்டி; இசன் பயோவா புதிய சாதனை!



லாசனே —

போல்வால்ட் என்றழைக்கப்படும் கம்பு ஊன்றித் தாண்டுதலில் 14ஆவது முறையாக உலக சாதனை படைத்துள்ளார் ரஷ்யாவைச் சேர்ந்த 22 வயதுடைய எலினா இசன் பயோவா.

லாசனேவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐ.ஏ.ஏ. எவ் கிராண்ட் பிரீ போட்டியில் தனது முதல் தாண்டுதலிலேயே 4.93 மீற்றர் உயரத்தை எட்டி சாதனை படைத்தார் அவர்.

சாதனை படைத்ததை அறிந்ததும், வெற்றிக் களிப்பில் துள்ளிக் குதித்தார். ரசிகர்கள் மட்டுமல்லாது, அறிவிப்பாளரும்கூட அவரது சாதனையை உணர்ச்சி பொங்க அறிவித்து மகிழ்ந்தனர்.

கடந்த குளிர்கால தொடரில் நடைபெற்ற உள்ளரங்க போட்டிகளில் 4 போட்டிக்கு ஒருமுறை சாதனை படைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் எலினா. தற்போது வெளிஅரங்கில் முதல் தாவலிலேயே சாதனை படைத்து அதே மாதிரியான முயற்சிக்கு அச்சாரமிட்டுள்ளார்.

ஒலிம்பிக் சம்பியனான இசன் பயோவா, பிரஸ்ஸல்ஸில் 2004 செப்ரெம்பரில் நடைபெற்ற போட்டியில் 4.92 மீற்றர் உயரம் தாண்டியதே இதற்கு முன்பு சாதனையாக இருந்தது.

இந்த ஆண்டுக்குள் 5 மீற்றர் உயரம்வரை தாண்டி புதிய சாதனை படைப்பேன் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

5 மீற்றர் உயரத்தை அவர் எட்டிவிட்டால், பெண் செர்ஜி புப்கா எனவும் அவர் அழைக்கப்படலாம்.

மகளிரைப் பொறுத்தவரை 5 மீற்றர் உயரத்தை எட்டிவிட்ட ஒருவரை ஜாம்பவான் என அழைக்கலாம். ஆடவர் பிரிவில் 6 மீற்றர் உயரத்துக்கு இணையானது மகளிர் பிரிவில் 5 மீற்றர் உயர சாதனை என்றார் இசன் பயோவா.

ரஷ்ய வீரர் செர்ஜி புப்கா, கம்பு ஊன்றித் தாண்டுதலில் சாதனை படைப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். 35 முறை புதிய சாதனை படைத்தார். 6 முறை உலக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். 1988 ஆம் ஆண்டு சியோல் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற பின்பு ஓய்வு பெற்றார்.

# சிம்பாப்வேக்கு எதிராக நியூஸிலாந்து போர்க்கொடி!

வெலிங்டன் —

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சிம்பாப்வேயைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றும் அந்த அணிமீது தடைவிதிக்க வேண்டுமென்று நியூஸிலாந்து, உலக கிரிக்கெட் அமைப்புக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

சிம்பாப்வே நாட்டு அரசாங்கமும், அந்த நாட்டின் தலைவர் றொபேட் முகாபேயும் மனித உரிமை மீறல் செயல்களில் தொடர்ந்து செயற்பட்டு வருவதால் அந்த நாட்டு கிரிக்கெட் அணியைப் புறக்கணிக்கவேண்டியது அவசியம் என்று நியூஸிலாந்து வெளிநாட்டு அமைச்சர் பில்கோப் கூறியுள்ளார்.

இது குறித்து அவர், சர்வதேச கிரிக்கெட் சபைக்கு ஒரு அவசர கடிதத்தை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில், சிம்பாப்வே நாட்டின் ஆயிரக்கணக்கான வீடுகளை முகாபே இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளார்.

சுமார் 2 லட்சம் மக்கள் வீடிழந்து தவிக்கிறார்கள். இப்படி மனித உரிமையைத் தொடர்ந்து முகாபே மீறி வருவது அனுமதிக்கத்தக்க செயல் அல்ல. அந்த அப்பாவி மக்களுக்காக நாங்கள் மிகவும் கவலைப்படுகிறோம். இது போன்ற நாட்டை கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஒதுக்கி வைக்க ஐ.சி.சி தனது விதியை மாற்றி அமைக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

அடுத்த மாதம் நியூஸிலாந்து அணி தென்னாபிரிக்க நாட்டுக்கு சென்று விளையாடவும், அதன்பின்பு சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் சென்று விளையாடவும் ஐ.சி.சி அட்டவணை அறிவித்துள்ளது. இந்த நிலையில் சிம்பாப்வேயை எதிர்த்து நியூஸிலாந்து போர்க்கொடி தூக்கியுள்ளது.

# இலங்கை உதைபந்தாட்ட (பி) அணிக்கு வீரர்கள் தெரிவு நடைபெறவுள்ளது!

யாழ்ப்பாணம் —

இலங்கை உதைபந்தாட்ட பி அணிக்கு (23 வயதுக்குட்பட்டோர்) வீரர்களை தெரிவுசெய்வதற்காக கொழும்பிலிருந்து நாளையும், நாளைமறுதினமும் இலங்கை உதைபந்தாட்டப் பயிற்சியாளர் சம்பத் பெரேரா மற்றும், கோல்காப்பு பயிற்சியாளர் சந்திரசிறி இருவரும் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதுடன், இவ்விரு தினங்களிலும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை பயிற்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்த வீரர்கள் தெரிவிற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி பருத்தித்துறை, மன்னார் லீக்குகளில் இருந்தும் வீரர்கள் வருகை தரவுள்ளனர். எனவே இலங்கை அணியில் இடம்பெற ஆர்வமுள்ள அல்லது உதைபந்தாட்ட பயிற்சி பெற ஆர்வமுள்ள வீரர்களை அனுப்பிவைக்குமாறு விளையாட்டுக் கழகங்களையும், பாடசாலை அதிபர்களையும் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் எம்.பிரான்சிஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

விளையாட்டு

# 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் லண்டன் நகரில் நடைபெறும்!



சிங்கப்பூர் —

2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு நிலவிய கடும் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடத்தப்படும் என்று இறுதியாக சர்வதேச ஒலிம்பிக் சங்கம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

பிரான்ஸ் - பரிஸ் நகரிலும், அமெரிக்கா - நியூயோர்க் நகரிலும், ரஷ்யா - மொஸ்கோ நகரிலும், இங்கிலாந்து - லண்டன் நகரிலும், இத்தாலி - மட்ரிட் நகரிலும் 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்தவிரும்புவதாக அறிவித்தன.

இது பற்றி முடிவு செய்ய சிங்கப்பூரில் 117ஆவது சர்வதேச ஒலிம்பிக் சபையின் கருத்தரங்கு கடந்த 3 நாட்களாக நடைபெற்றுவந்தது. இதில் பல்வேறு நாட்டு அரசியல் தலைவர்களும், விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், முன்னாள் சம்பியன்களும் கலந்து கொண்டார்கள்.

கடைசியாக லண்டன் - பரிஸிடையே கடும் போட்டி நிலவியது. முதல் 3 சுற்றுகளில் மொஸ்கோ, நியூயோர்க், மட்ரிட் ஆகியவை தோற்று போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டன. 4ஆவது சுற்று வாக்கெடுப்பில் லண்டன் வெற்றிபெற்றது. ஐ.ஓ.சி. தனது வாக்கை லண்டனுக்கு போட்டது.

ஒலிம்பிக் வரலாற்றில் இதற்கு முன் இப்படி நடந்ததில்லை.

ஐ.ஓ.சி. தனது வாக்கை வழங்கியதன் மூலம் லண்டன் இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது. லண்டனுக்கு 54 வாக்குகளும், பரிஸுக்கு 50 வாக்குகளும் கிடைத்தன. இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் 3 நாட்களுக்கு முன்பு சிங்கப்பூர் வந்தார். ஐ.ஓ.சி. உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அவர்களை லண்டனுக்கு ஆதரவாக வாக்குப்போட வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்டப் போட்டி!

மாதகல் —

தமிழீழ விளையாட்டுத்துறை வலிகாம உதைபந்தாட்ட லீக் ஆதரவில் நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் பொது மக்களின் ஞாபகார்த்தமாக சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையில் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் -

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் காளி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும், 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் றோயல் ஏ அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

## மாதகல் சென்.தோமஸ் உதைபந்தாட்டம்

# சென்.சேவியர் பி, சி அணிகள் நேற்றைய போட்டிகளில் வெற்றி!



யாழ்ப்பாணம் —

மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் சென்.சேவியர் பி மற்றும் சி அணிகள் வெற்றிபெற்றன.

நேற்றுமாலை 3.30 மணியளவில் சென்.சேவியர் மற்றும் ஆனைக்கோட்டை அணிகளுக்கிடையிலான முதலாவது ஆட்டம் இடம்பெற்றது. இதில் ஆரம்பம் முதலே சென்.சேவியர் பி அணியின் ஆதிக்கமே நிலவியது. ஆட்டம் ஆரம்பித்து 6 ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணி வீரர் இருதயராசா கோலொன்றைப் போட்டார். இதன்பின் 17ஆவது நிமிடத்திலும் அவரே இரண்டாவது கோலையும் போட்டார். இதனையடுத்து 19ஆவது நிமிடத்தில் அவ்வணியைச் சேர்ந்த கியூட் மற்றொரு கோலைப் போட்டார்.

இந்த நிலையில் 25ஆவது நிமிடத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியைச் சேர்ந்த குணசீலன் தனது அணிக்கு முதலாவது கோலையும், 39 ஆவது நிமிடத்தில் அதே அணி வீரர் செல்வகுமார் அணிக்கான இரண்டாவது கோலையும் போட்டார்.

எனினும் சென்.சேவியர் அணி வீரர் இருதயராசா 48ஆவது நிமிடத்திலும், நிர்மலகஜன் 49ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். இறுதியில் சென். சேவியர் பி அணி 5:2 என்ற கோல் அடிப்படையில் ஆனைக் கோட்டை யூனியனை வெற்றி கொண்டது.

மாலை 4.30 மணியளவில் சென்.சேவியர் சி அணிக்கும், சென்.நீக்கிலஸ் அணிக்கும் இடையிலான போட்டி நடைபெற இருந்தபோதிலும், சென்.நீக்கிலஸ் அணி சமுகமளிக்காத காரணத்தால், சென்.சேவியர் சி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

## வடக்கு - கிழக்கு மாகாண

# பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சி போட்டி முடிவுகள்!

வவுனியா —

வவுனியா நகரசபை மைதானத்தில் வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் உடற் பயிற்சிப் போட்டி நேற்று இடம் பெற்றது. இதில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு -

ஆண்கள் பிரிவு -

முதலாமிடம் : ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாமிடம் : பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மூன்றாமிடம் : முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க.பாடசாலை.

பெண்கள் பிரிவு -

முதலாமிடம் : வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், இரண்டாமிடம்: கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, மூன்றாமிடம் : மானிப்பாய் மகளிர் கல்லூரி.

இன்று வலைப்பந்தாட்டப் போட்டி நடைபெறும்.



15 வயது அணி



17 வயது அணி



19 வயது அணி

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மூன்று பிரிவு அணிகளும் மாகாணமட்டப் போட்டிக்குச் சென்றுள்ளன. 15 வயதுப் பிரிவில் மாவட்ட சம்பியனாகவும், 17 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்றும், 19 வயதுப் பிரிவில் மாவட்ட சம்பியனாகவும் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# போராட்டத்தின் அச்சாணியாக மாறி புலிகளைப் பலப்படுத்திய கரும்புலிகள்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

யாழ்ப்பாணம் —

"தரைக்கும், வானத்துக்கும், கடலுக்கும் மத்தியிலே ஆயுத பலத்தாலன்றி தம்மையே ஆயுதமாக்கிக்கொண்டு, இந்த மண்ணில் கரும்புலி மாவீரர்கள் படைத்த சாதனைகள் மகத்தானவை.

போராட்டத்தின் அச்சாணியாக தம்மை ஆகுதியாக்கி, புலிகளின் பலத்தை என்றும் குன்றாது, பாதுகாத்தவர்கள் இந்தத் தெய்வீகப் பிறவிகள். இவர்களையும், இவர்களை எமக்குத் தந்த பெற்றோர்களையும் இந்த மண் என்றென்றும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளது. அதனை இன்று செய்கிறது. இதனை என்னென்றும் இந்த மண் செய்யும்'' என்று வடமராட்சி கரும்புலிகள் நிகழ்வில் உரையாற்றும்போது யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

முதற்கரும்புலி கப்டன் மில்லரின் அடிச்சுவட்டில் இதுவரைக்கும் இந்த மண்ணுக்குக் கரும்புலி மாவீரர்களாகத் தம்மை ஆகுதி ஆக்கிக்கொண்டவர்கள் 265 பேர். தாயகத்தின் விடிவொன்றே தமது இலட்சியம் என உயிரை ஒரு பொருட்டாக எண்ணாது, தம்மையே அழிக்கத் துணிந்தவர்கள் இந்தக் கரும்புலி மாவீரர்கள். இவர்களின் கனவு நிச்சயம் வீண்போகாது.

யாருக்குமே கிடைத்திராத ஒரு தலைவன் எம்மையெல்லாம் வழிநடத்திச் செல்வதற்கென்றே பிறந்துள்ளான். இத்தகைய தலைவன் இதுவரை சிங்கள தேசத்தில் இருந்ததுமில்லை, இருக்கப்போவதுமில்லை. அத்தகைய தலைவனின் சிந்தனைகளாலேயே நாம் வழிநடத்தப்படுகிறோம்.

நாம் பலமற்றவர்களல்ல, பலம் மிக்கவர்கள். சாத்வீகம், சமரசம் என்ற வார்த்தைக்குள் எம்மைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி, தனிமைப் படுத்தி, வெளிநாடுகளின்துணைகொண்டு, எம்மையும், எமது போராட்டத்தையும் அழிக்கலாமென்று பகல் கனவு கண்டவர்களுக்குப் பாடம் கற்பிக்கிற அளவுக்கு எமது பலத்தைப் பலவழிகளிலும் நிரூபித்துக் காட்டியுள்ளோம். ஆயினும், இந்த உண்மையை உணர மறுத்து, கபடத் தனமான வழிகளைக் கையாண்டு, எமது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யலாமெனக் கனவு காண்கின்றனர்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியக் காரணமாக இருந்தவர்கள், இந்த நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் மறைந்திருந்துவிட்டு, போர்நிறுத்த உடன்படிக்கை என்ற போர்வையில் நாம் அமைதி காக்கின்ற நேரத்தைப் பயன்படுத்தி, மீண்டும் அதே இனவாதக் கும்பல்கள் தம் சுயரூபத்தை வெளிப்படுத்தத் தடையாக நிற்கின்றன. சரித்திரம் அறியாதவர்கள் நாங்களல்ல.

கடந்த மூன்றாண்டுகளாக போருமில்லை, சமாதானமுமில்லை என்ற நிலையில், எமது மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.


போர்நிறுத்தமும், சமாதானமும் எமக்குமட்டுமுரியதல்ல. அது அரசுக்கும், சிங்கள தேசத்துக்குமுரியது. இதனை அவர்கள் தொடர்ந்தும் மறுப்பார்களேயானால், விளைவு விபரீதமானதாகவே அமையும்.

இந்தவகையிலேதான் நாம் நோர்வே மத்தியஸ்தர்களுக்கு எமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கியுள்ளோம். எம்மால் அளிக்கப்பட்டுள்ள காலக்கெடு - சமாதான சூழலை முன்னெடுத்துச் செல்வதற்கு அளிக்கப்படும் சாதகமான பதிலில் தான தங்க நிற்கிறது. தவறும் பட்சத்தில் நிலைமை வேறாகவே அமையும். அது சிங்கள தேசம் விட்ட மிகப்பெரும் வரலாற்றுத் தவறாகவே கருதப்படும்.

இலங்கைத் தீவில் இரண்டு தளம், இரண்டுகட்டுமானம், இரண்டு நாடு உண்டென்ற உண்மையைச் சர்வதேசம் உணரத் தலைப்பட்டுள்ளது. இதனைச் செய்தவர் எமது தலைவர். எமது போராட்டம் நீதியும், உறுதியும், உண்மையுமுள்ளதென சர்வதேசம் கருதுமளவுக்கு இன்று நிலைமை மாறிவிட்டது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் தான் கரும் புலிகள் தினத்தை நாம் ஒன்றிணைந்து அனுஷ்டிக்கிறோம. எனவே இந்தக் காலம் எமது வெற்றிக்குரிய அரிய நேரம்.

எமது போராட்ட வரலாற்றிலே மக்களின் மகத்தான பங்களிப்பை நாம் நன்குணர்ந்திருக்கிறோம். தகுந்த நேரத்தில், தகுந்த உதவிகளைத் தந்துதவியது போல, தொடர்ந்து உங்களின் அளப்பரிய பங்களிப்பை ஒவ்வொருவரும் அளிக்க முன்வாருங்கள்.



குடாநாட்டு மக்களாகிய நாம் எமது கருமங்களைச் சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்லப் போடப்படும் தடைகளை உடைத்து, எமது மண்ணில் சுதந்திரமாக எமது மக்களை வாழவைக்கும் நாள் வெகுதூரத் தில் இல்லையென்பதை இந்தக் கரும்புலிகள் தினத்தில் உறுதிபடக் கூறிவைக்கிறோம் எனத் தெரிவித்தார். (13)

## பிராந்திய முகாமையாளராக கிருபாகரன் நியமனம்

யாழ்ப்பாணம் —

ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் வடக்கு-கிழக்குப் பிராந்திய பொது முகாமையாளராக எ.கிருபாகரன் இன்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு-கிழக்குப் பிராந்திய முகாமையாளராக கடமையாற்றிய கனக சூரியர் - நேற்றுடன் ஓய்வு பெற்றுச் செல்வதை அடுத்தே இந்தப் பதவிக்கு கிருபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி, பதவியுயர்வுடன் இடமாற்றலாகிச் சென்ற க.பாலசுப்பிரமணியம், ஓய்வுபெற்ற தனபாக்கியம் சூரியகுமாரன் மற்றும் ஓய்வு பெற்ற கிராம அலுவலர் க.இராஜதுரை ஆகியோருக்கான பிரிவுபசார விழா இடம் பெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் எடுக்கப்படும் இந்த விழா - எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம்பெறும். (24)

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவகால ஒழுங்கு தீர்மானங்கள்

மாவிட்டபுரம் —

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவகாலத்தில் கடைப்பிடிக்கவேண்டிய போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு, சிற்றுண்டிச்சாலை, தொண்டர் சேவை மற்றும் பொதுவான தேவைகளின் ஒழுங்குகள் குறித்து - கடந்த 30 ஆம் திகதி தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்படி போக்குவரத்துச் சபை பஸ் மற்றும் தனியார் பஸ்கள் என்பவற்றை சேவையில் ஈடுபடுத்தவும், இரண்டுக்கும் தனித்தனியாக தரிப்பிடங்களை ஏற்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது.

தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை இந்தச் சேவை நடைபெறும். விசேட தினங்களில் மட்டும் காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை சேவை நடைபெறும்.

பக்தர்கள் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் செல்ல அனுமதிக்கப்படுவர்.

ஆலய சுற்றாடல் துப்புரவுப் பணிக்கென பிரதேசசபை ஊழியர்கள் 15 பேர் அனுமதிக்கப்படுவர். அவர்களை ஏற்றிச்செல்லும் உழவு இயந்திரத்துக்கான எரிபொருளை மாவை கந்தன் ஆதீன கர்த்தா வழங்குவார்.

ஆலய வீதியில் தற்காலிக முதலுதவிச் சேவைக் கிளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பளைக் கிளை என்பன இணைந்து பாதுகாப்பு வழங்குதல் - முதலுதவிச் சங்கம், சாரணர் சங்கம் பரியோவான் முதலுதவிப் படை, முதலுதவிச் சங்கம் என்பன தொண்டர் சேவையை வழங்குதல் போன்ற பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## துறைமுகப்பகுதி ஆழமாக்கப்படாமையால் பயணிகள் படகு சேவையில் சிரமங்கள்



யாழ்ப்பாணம் —

நெடுந்தீவு பிரதேசத்தின் துறைமுகப் பகுதி ஆழமாக்கப்படாமையால், தற்போதைய பருவக்காற்றுக் காரணமாக துறைமுகப்பகுதிக் கடல் வற்றி, படகுகள் பயணிகளுடன் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு - துறைமுகத்தை விட்டு ஆழங்கூடிய கடற்பரப்பில் தரித்து நிற்க, நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கப் படகுமூலம் பயணிகளை ஏற்றி, பின்னர் குமுதினிப் படகில் ஏற்றும் செயற்பாடு மூலமே நெடுந்தீவு மக்கள் தமது பயணத்தை கடந்தவாரம் முதல் மேற்கொள்கின்றனர்.

இதேவேளை துறைமுகப் பகுதி ஆழமாக்கலுகென வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்ட போதும், அது தொடர்பாக வேலைகள் மேற்கொள்ளப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது.

தற்போதைய கடல் வற்றுக் காலத்தில் -இந்தத் துறைமுகப் பகுதி ஆழமாக்குவது சுலபமானதுடன், விரைவாகவும் மேற்கொள்ளமுடியும்.

ஆனால் எதிர்வரும் மாதங்களில் நீர்மட்டம் உயரும் என்பதால், வேலைகளை விரைவாகவும், சீராகவும் செய்யமுடியாத நிலை ஏற்படும் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (113)

## புலமைப் பரிசிலில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் —

கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாணவ, மாணவியர்களை - நல்லூர் பிரதேசசபையினர் பரிசில்கள், மற்றும் சேமிப்புச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேசசபை கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில், இந்தப் பிரதேச சபைச் செயலர் பொ.வைரமுத்து தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்து கொள்ளவுள்ளார். (63)

## பொன்விழா நிறைவைக் காணும் திருவள்ளுவர் சனசமூக நிலையம்

தும்பளை —

தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய பொன்விழாவும், இந்த நிலையத்தின் கீழ் இயங்கிவரும் தமிழொலி மாணவர் மன்றத்தின் 14 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், நாளை மாலை 7 மணிக்கு நிலையத் தலைவர் ப.திருச்செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பொன்விழா சார்ந்த சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கல், மன்ற மாணவர்களுக்கான சேமிப்பு வைப்புப் புத்தகங்கள் வழங்கல், பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், சமூக சேவையாளர்களைக் கௌரவித்தல் என்பவற்றோடு, மன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

## இந்து குருமாருக்கு அடையாள அட்டை வழங்க விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

இந்து குருமாருக்கான விசேட அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள ஆலயங்களில் பணிபுரியும் இந்து குருமார்களான சிவாச்சாரியப் பெரு மக்கள், பூசகர்கள் என்போர் இந்த விண்ணப்பப் படிவத்தைக் பெற்றுக்கொண்டு, அதை உரிய வகையில் பூரணப்படுத்தி அனுப்பி வைப்பதன் மூலம் இந்த அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்பும் இந்து குருமார் "பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248,1/1 காலி வீதி, கொழும்பு -04'' எனும் முகவரிக்கு - தமது சுயமுகவரி எழுதப்பட்ட 24 x 11 சென்ரிமீற்றர் அளவுள்ள கடித உறையை அனுப்பிவைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளருக்கு முகவரியிடும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "இந்துக்குருமார் விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

நேரில் பெற விரும்புவோர் மேற்குறித்த திணைக்கள முகவரிக்கு நேரில் வந்தும் பெற்றுக் கொள்ளலாம் எனத் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அகநிலை மாற்றத்தின் அவசியம்






சில புத்தகங்களைக் குறிப்பிட்டு "இவற்றைப் படித்திருக்கிறீர்களா என்று கேட்டபோது "இல்லை" என்றார்.

பொழுதுபோக்கு என்பது தேடல் மிகுந்ததாகவும் அமைய வேண்டும். பெண்கள் தம் ஆளுமைகளை விருத்தி செய்துகொள்ளும் எல்லாவிதமான தேடல்களையும் ஏற்படுத்த வேண்டும். துறைசார் நுணுக்கங்களை அறிந்து கொள்ளவேண்டும்.

இன்னுமொரு பெண்,

'எங்கள் வீட்டருகில் இருக்கும் கணவனும், மனைவியும் வேலைக்குப் போகிறார்கள். அவர்களுடைய குழந்தையை என்னிடம் விட்டுவிட்டுப் போவார்கள். அந்தக் குழந்தையைப் பார்த்துக்கொள்வதுதான் என்னுடைய பொழுதுபோக்கு. அவர்களும் எனக்கு உதவி செய்வார்கள் என்றார். இதுவும் மனதுக்கு நிறைவாயிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை காய்கறிகள் வாங்குவதற்காக சந்தைக்குச் செல்லும் வழியில், ஒரு எதிர்பாராத சந்திப்பு. அவள் எனக்குத் தெரிந்தவள். சுகநல விசாரிப்புகளின் பின்

'இப்ப எங்க வேலை...'

அவள் முகம் சுருங்கிப் போக... 'போறேல்லை...' என்றாள்.

'ஏன்?...'

'பாதை திறந்தவுடனை அம்மாக்கள் ஊருக்குப் போட்டினம். வேலையை விடவேண்டிப் போச்சு...'

'வீட்டில என்ன செய்கிறியள்?...'

'சமையல்.. பிள்ளையளைப் பார்க்கிறது... ரீ.வி பார்க்கிறது...'

'புத்தகம் படிக்கிறேல்லையா?...' அவள் முன்பு ஏராளமான புத்தகங்களைப் படிப்பவள் என்பதால் கேட்டேன்.

'படிக்க விருப்பந்தான்... புத்தகம் எடுத்துவந்து தாறதுக்கு ஒருதரும் இல்லை...'

மனதுக்குள் துயரம் அழுத்த... 'சரி பிறகு சந்திப்போம்' என்றேன். தலையை ஆட்டிவிட்டு நடந்தாள்.

இன்னுமொரு பெண். உயர்வான பணியில் மதிப்போடு இருந்தவர். பணியில் இருந்த காலங்களில் ஒரு சில உதவியாளர்கள் இருந்தனர். இப்போது வெறுமனே வீட்டில்,

அவருடைய துணைவர் ஆசிரியராக இருக்கிறார். கல்வி சம்பந்தமான ஒரு தேவைக்காக வீட்டுக்குப் போன போது...

'வாங்கோ... இப்பதான் வந்தவர் நிக்கிறார்...' கதவைத் திறந்ததே என் நண்பிதான்.

அவளைப் பார்த்ததும் மனம் அதிர்ந்தது.

'ஏன் இப்படி ஊத்தையாய்... குளிக்கேல்லையா?...' சடாரென்று கேட்டு விட்டேன்.

இரண்டு பிள்ளைகளும் சரியான குழப்படி. இவர் வந்தாப்பிறகு இவரிட்ட விட்டுட்டுத்தான் குளிக்கிறனான். இப்பதான் வந்தவர். அவர் வந்தார். கதைத்தோம், தேநீர் குடித்தோம், புறப்படும்போது -

'ஏனிப்ப வேலைக்குப் போறேல்லை...' கேட்டேன்.

'இப்பவும் என்ர பிள்ளையளை... பார்க்கிறதா ஆரும் பொறுப்பெடுத்தா உடன வேலைக்குப் போவன்...' என்றார்.

'சரி...' விடைபெற்று வந்தேன்.

இன்னுமொரு பெண்.

தனியார் நிறுவனமொன்றில் கணக்காய்வாளராக இருந்தவர். இப்போ வீட்டில். அவர் சொன்னார்.

'அம்மாதான் என்ர பிள்ளையள பாத்தவ. இப்ப அவவுக்கு கண் ஒப்பிரேசன் நடந்திருக்கு... அவவால ஓடியாடவோ, சமைக்கவோ ஏலாது. இவரோட கடையில நிக்கிற பெடியளுக்கும் இஞ்சதான் சாப்பாடு... என்னால எல்லாத்தையும் சமாளிக்க ஏலாது... வேலையை விட்டிட்டன்...'

'வீட்டில என்ன செய்யிறியள்?...'

'மகள... நேசறிக்குக்கொண்டு போறது... சந்தைக்குப் போறது... கடைக்குச் சாப்பாடு கொண்டுபோறது...'

'உங்கட திறமையளைக் காட்டிறமாதிரி வேலைசெய்ய விருப்பம் இல்லையோ'

'விருப்பம்தான்... வீட்டு வேலையளை ஆர் செய்யிறது?...'

இப்படியாகத்தான் பல பெண்களின் விருப்பு, வெறுப்புகளுக்குக் குடும்பம் சுமையாக இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வந்த பெண்மணி ஒருவர் கூறினார்.

'இங்கு சின்னப் பிள்ளைகளை நான் உன்னிப்பாக அவதானித்து வாறன். ரொபி சாப்பிட்டால் பேப்பரை வீட்டுக்குள்ள வீசுகிறார்கள். விளையாடிவிட்டு விளையாட்டுப் பொருட்களை அப்படியே போடுகிறார்கள். ஆனால் அங்கே வெளிநாடுகளில் மிக சிறு பராயத்திலே **'Day Care'** எனப்படும் பராமரிப்பு நிலையங்களில் குழந்தைகளை விடுகிறோம். அங்கே சாப்பாட்டுக் கழிவுகள் குப்பைத்தொட்டிக்குள் போடவும், விளையாட்டுப் பொருட்களை எடுத்த இடத்தில் வைக்கவும் இது போன்ற வேறு நல்ல பழக்கவழக்கங்களைப் பழக்குகின்றார்கள். இத்தகைய பராமரிப்பு நிலையங்களில் குழந்தைகளை விட்டுவிட்டே பல பெற்றோர்கள் வேலைக்குப் போகின்றார்கள் என்றார்.

உண்மையில் எங்களுடைய சமூகப் செயற்பாடுகளில் ஆளுமைகளையும், ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வரவேண்டுமென்றால், குறைந்தபட்சம் ஒவ்வொரு கிராமங்களிலும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இருப்பது நல்லது. சில இடங்களில் போசாக்கு பூங்காக்கள் இருக்கின்றன. இவற்றில் தமது குழந்தைகளைச் சேர்த்து விட்டு, வேலைக்குச் சென்று வருவதைப் பார்க்க முடிகிறது.

(தொடரும்...)

# மனம் திறந்து பேசுங்கள்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

அறிமுகமானவர் என்ற அளவுடன் தான் பழக்கம் இருக்கவேண்டும். பேச்சோடு சரி, எதுவும் இரவல், கடன் கேட்கிற அளவுக்குப் போய் விடக்கூடாது. அவர்கள் மனதில் உங்களைப் பற்றி மதிப்புக் குறைந்து விடும்.

யாருடனும் எளி மையாகப் பழகுங்கள். சரளமாகப் பேசுங்கள். அவர்கள் முன்னே மறுக்காதீர்கள். உங்கள் செல்வத்தையோ, செல்வாக்கையோ காட்ட வேண்டாம்.

ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளத்தான் நட்பு என்று சொல்லுவார்கள். ஆனால் நட்பு வேறு, பழக்கம் வேறு. பழக்கம் என்பது ரெயில் சிநேகிதம் போன்றது. தவறு கண்டால் இடித்துச் சொல்ல வேண்டாம். அது தான் நல்ல நட்பு என்றும் கூறுவார்கள். இதுவும் பழக்கத்துக்குப் பொருந்தாது. நல்ல பழக்கத்துக்கு வெறும் புகழ்ச்சி மட்டுமே வேண்டும்.

எல்லோரும் நண்பர்களாக இருக்க முடியாது. ஆனால் யாரோடும் பழக முடியும். பண்போடு பழகினால் தான், மற்றவர்கள் நம்மோடு பழக விரும்புவார்கள். இல்லாவிட்டால், விலகி ஒதுங்குவார்கள். ☆

# உடைத்தெறியப்படும் பெண் எல்லைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)


சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த பெண்கள் பற்றிய சமூகக் கருத்துகளை விட, தற்போதைய கருத்துகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெண்ணிலைவாதம் என்ற சர்ச்சைக்குரிய கருப்பொருள் - தற்பொழுது சமூகத்தவர் மத்தியில் சலசலத்துக்கொண்டிருப்பதையும் காணக் கூடியதாக இருக்கிறது. பெண்கள் பற்றி ஏதோ இவர்களுக்கு சிந்திக்கத் தூண்டுகிறது என்பது இங்கு நாம் சந்தோஷப் படவேண்டிய விடயம். பெண்கள் விடயங்கள் பற்றி ஏறெடுத்துப் பார்க்காத சமுதாயம் - பெண்கள் பற்றிய விடயங்களை அலசி ஆராய்வது சிறப்பானதே!

பெண் நிலைவாதம் என்ற அருமையான பதத்தை இன்று எத்தனை மனிதர்கள் புரிந்து வைத்திருக்கின்றார்கள்? ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதையும், அவள் தன்னளவில் முற்று முழுதாக, சுதந்திரமாகச் செயற்படக்கூடியவள் என்று சொல்வதுவே பெண்ணிலைவாதம். ஆண்களை அடக்குவதோ அன்றி, ஆண்களைப் பெண்கள் ஆட்சி செய்வதோ இல்லை. ஆனாலும் ஊடகங்களால் இவை தவறான முறையில் பரப்பப்பட்டமையே இன்று பெண்ணிலைவாதம் என்றால், சமூகம் தவறான கண்கொண்டு பார்ப்பதற்கு மிகப்பெரிய காரணமாகி விட்டது.


இவைபற்றிய கருத்துகள் பெண்கள் மத்தியில் பரவி வருகின்றபோதிலும், அதை ஆண்கள் சமுதாயம் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் இருக்கின்றார்கள் என்பதைத்தான் தெரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வாறான சில அம்சங்கள் இருப்பின், அவளைச் சாமானிய பெண்ணாகக் கருதும் மனப்பாங்கே ஆண்களிடம் காணப்படுகிறது. இன்றும் குடும்பப் பாங்கான பெண் தேவை என்று விளம்பரப்படுத்துவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கிறது. அதாவது - திருமணம் என்று வருகின்றபோது, ஆண்களுக்குப் பெண்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, பேசாமல் வீட்டோடு இருந்துவிடவேண்டும். அதற்கு முன்னர் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவமும், ஊக்கமும் பின்னர் தேவையில்லை. அவள் வீட்டில் இருந்து சமைத்து பிள்ளைகளைக் கவனித்தால் போதும்.

எனினும் இவ்வாறான மனநிலைகள்கூட விரைவில் மாற்றமடையும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் தற்போது பெண்கள் இதுபற்றிச் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறார்கள். சமூகத்தில் தமது பங்களிப்புப் பற்றி அவர்கள் உணர்ந்துவிட்டார்கள். பெண்களைப் பேதைகளாகப் பார்ப்பதை இன்று பெண்கள் சமுதாயமே எதிர்த்து ஒதுக்கி வருகிறது. இந்த நிலையைக் கருத்தியல் ரீதியாக, பெண் கள் தொடர்பாடல் ஒன்றை ஆண்களுக் கும், பெண்களுக்கும் ஏற்படுத்தும் என நாம் எதிர்பார்க்கலாம்.

கருத்தியல் ரீதியாகப் பெண்களை அணுகும்போது, பெண் என்ற எல்லை பாதுகாப்பானதாக மாறுமேதவிர, அவை



நம்மை அச்சுறுத்துபவையாக இருக்க மாட்டாது. பெண்களால் முன்வைக்கப்படுகின்ற இந்தக் கருத்தியல் ரீதியான தொடர்புக்கு - ஆண்கள் சமூகம் தயாராகுகின்றபோது, பெண்ணைச் சூழ்ந்திருக்கும் குறுகிய எல்லைகள் உடைத்தெறியப்படும். இந்தச் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பெண்கள்தான் அரும்பாடுபடவேண்டும். ☆




# சுனாமி ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

**(14 ஆம் அத்தியாயம்)**

வானொலியில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு கோபம் வந்தது. திடீரென மின்சாரம் நின்றுவிட்டது. நான் வெளியே வந்தேன். அக்கம் பக்கத்து வீடுகளிலும் வெளிச்சம் இல்லை. இனி ஒண்டும் செய்ய ஏலாது. பேசாமல் படுத்து நித்திரை கொள்ள வேண்டியது தான். அதற்குள் மீண்டும் மின்சாரம் வந்து விட்டது. ஆனால் பாட்டு முடிந்து விட்டது. வானொலியில் செய்தி தொடங்க... நான் வேண்டாவெறுப் பாகவே காதைக் கொடுத்தேன்.

திருமலையில் நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது.

அதற்குள் அம்மாவின் குரல்கேட்டுது!

பரிமளா! பரிமளா!....

நான் வானொலியை மூடிவிட்டு, அம்மாவின் குரல் வந்த திக்கை நோக்கிப் போனேன். அம்மா அடுக்களையில் இடியப்ப உரலுடன் குந்தியிருந்தாள்.

படிக்கிற பிள்ளை நேரகாலத்துக்குச் சாப்பிட வேண்டாமே! அம்மாவின் குரலில் இருந்த பரிவு என்னைத் தொட்டது.

தம்பி நித்திரையோ அம்மா!

ஓம்! அவனை நித்திரையாக்கிப் போட்டன். அம்மா சொல்லிக் கொண்டே என்ர சாப்பாட்டுக் கோப்பையை எடுத்து வைத்து, நாலைந்து இடியப்பங்களை வைத்தாள். குழம்பை அகப்பையால் எடுத்து... எனக்கு....பழைய நினைவு வந்தது. அந்தக் கோப்பை!....அம்மப்பா.... மலையில் இருந்த வாழ்க்கை ... எல்லாம் முட்டி மோதிக்கொண்டு அலை போலப் புரண்டு வந்தது.

என்ன பரிமளா!.... கடுமையான யோசனை?

அம்மா குழம்பை விட்டுக் கொண்டே கேட்டாள். என் நினைவில் வானொலிச் செய்தியும் புரண்டது.

அம்மா! மலையில குழப்பம் போல கிடக்கு!

என்ன....! குழப்பமோ!....

அம்மா திடுக்கிட்டாள்.

ஓம்! அம்மா....! வானொலியிலை செய்தியில சொன்னது! நான் சொல்ல அம்மாவின் முகத்தில் வேதனையின் கீறல்கள்! நான் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். திடுக்கிட்டுப்போனேன்!....

அம்மா உன்ர பேசரி மூக்குத்தி எங்கே அம்மா...

அது கிடக்கட்டும் நீ சாப்பிடு பிள்ளை!

அம்மா ஏன் அதைக் கழட்டினனி?

நான் விடாப்பிடியாகக் கேட்க, அம்மா சொன்னாள்.

அது சுரை தேய்ஞ்சு போச்சு! கழட்டி வைச்சிட்டன்!

அம்மா பொய் சொல்லாதையுங்கோ! அதையும் வித்துப் போட்டியளே? நான் கேட்க, அம்மாவுக்குக் கோபம் வந்தது.

ஓமடி! வித்துப் போட்டன்! இல்லாட்டி எப்படிச் சாப்பிடுறது?

எனக்கு இப்ப என்மேல் கோபம் வந்தது. அம்மாவிடம் இதைக் கேக்காமல் இருந்திருக்கலாம்.

அம்மா!....

என் குரலில் இருந்த கனிவு - அம்மாவின் மனதைத் தொட்டிருக்க வேணும்.

பரிமளா! பக்கத்து வீட்டு மாமியிட்ட அதை அடைவு வைச்சிட்டன்.

இந்த மாதம் சீட்டுக் காசு வந்த உடனை மீட்கப் போறன்!

இப்ப எனக்கு அம்மாவைப் பார்க்க வெக்கமாக இருந்தது. அம்மா எங்களை வளர்க்க என்ன பாடுபடுகிறாள். மாவிடித்துக் கொடுத்து, இடியப்பம் அவித்துக் கொடுத்து... தோசை சுட்டு விற்று.... என் மனம் பொங்கியது. இந்தக் கோப்பையில இருக்கிற இடியப்பம்... இண்டைக்கு முன் வீட்டாரின்ர ஓடருக்கு அவிச்ச மிச்சம்!... பலகாரம் தேடிக் கொடுத்து... அதில் கொஞ்சம் மிச்சம் பிடித்து....அம்மா!.... அதை எனக்கும் தம்பிக்கும் தருகிறாள்!.... அம்மா!.... நானும் உனக்கு ஏதாவது உதவி செய்ய வேணும்!.....

பரிமளா!..... பரிமளா!.....

வெளியே பக்கத்து வீட்டு மாமியின் குரல் கேட்டது. அம்மா எழும்பிப் போனாள்.

இப்ப றேடியோவில செய்தி கேட்டனாங்கள். மலையில திரும்பவும் குழப்பமாம்!

அப்பிடியே மாமி!.... பரிமளா செய்தி கேக்கல்ல பாட்டு மட்டும்தான் கேட்கிறாள்!...

உன்ர அவரையும் கண்டதாக நேற்று வீட்ட வந்தவை சொல்லிச்சினம்!

எங்க கண்டவையாம்!...?

யாழ்ப்பாணம் வாற பஸ்சில இருந்த வராம்! இஞ்சை இண்டைக்கு அவர் வந்திருக்க வேணும்.

நான் சாப்பிட்டு முடிஞ்சுது. கோப் பையைக் கழுவி வைச்சிட்டு, அடுக்களையை ஆராய்தேன்! ஒருவாளி நிறைய அரிசி ஊறப் போட்டுக் கிடந்தது. ஓ!.... அம்மா அரிசி இடிக்கப் போகிறாள். நாளைக்கு விடியப்புறம் அவள் அரிசி இடிக்கும்போது, நான் ஏதாவது உதவி செய்ய வேணும். நான் அடுக்களையை விட்டு வெளியே வர, மாமி சொன்னது கேட்டது.

எல்லாத்தையும் சமாளிச்சு நடக்க வேண்டும் பிள்ளை! கடவுள் ஒரு நாளும் கைவிடமாட்டார்!

சொல்லிவிட்டு மாமி பேர்ய்விட்டா. அம்மாவைப் பார்த்தேன். முகம் இருண்டு கிடந்தது. இப்ப அம்மாவிடம் ஒன்றும் கேட்கக் கூடாது. கேட்டாலும் ஏதும் மழுப்புவாள். பாவம்!.... அவள் எத்தனை பொய் சொல்லுறது. என் மனம் அவளுக்கு ஏதாவது உடனே செய்ய வேணுமென விரும்பியது.

அடுத்த நாள் விடியற்காலை மாவிடிக்கும் சத்தம் கேட்டு, நான் விழித்துக் கொண்டேன். பாயைச் சுருட்டி வைத்து விட்டு, அடுக்களைப் பக்கம் போனேன். அம்மா தனியே மாவிடித்துக் கொண்டிருந்தாள். இடித்த மா அரிக்கப்படாமல் ஒரு பெரிய பெட்டியில் இருந்தது.

அம்மா...! நான் மாவை அரிச்சுத் தரட்டே?

என்னுடைய குரல் அம்மாவைக் கொஞ்சம் திடுக்காட்டம் அடையப் பண்ணி விட்டுது.

ஏன் பிள்ளை இப்ப எழும்பினனி?.... நாளைக்குப் பள்ளிக்கூடம் போகவேணும்!...

அம்மா நாளைக்கு இல்லை இண்டைக்கு!

நான் சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு பின்னறையால் தட்டுப் பெட்டியில் மாவை அரிக்கத் தொடங்கினேன். அம்மா என்னைத் தடுக்கவில்லை. எனக்



குக் கை வலித்தது என்றாலும், அம்மாவுக்கு இதைச் செய்து குடுக்க வேணும்!

பிள்ளை கட்டையைஅந்த வட்ட மூடலுக்கை தனியாப் போடு!

சரியம்மா!....

எனக்கு நல்ல சந்தோசம். அம்மாவுடன் சேர்ந்து வேலை செய்வதிலும் ஒரு சுகம் இருந்தது. அம்மா வேகமாக உலக்கையைக் கைமாறிப் போட்டுக் கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கும் போது அசல் அம்மம்மா போல இருந்தது! அந்த மலை!.... வீட்டில அம்மம்மா இடிக்கும்போது..... மீசைக்கார மாமா!..... ஏதோ.... சொன்னது..... அது நினைவில் புரண்டெழ.... அம்மாவை நிமிர்ந்து பார்த்தேன்!

என்ன பரிமளா!....அம்மம்மாவை நினைச்சனியே!

அம்மா!.... எப்படிக் கண்டுபிடிச்சனியள்!

எனக்கும் அவவின்ர நினைவு வந்தது. ஒருதற்ற உதவியும் இல்லாமல் தனிய மனுசி 5 கொத்து அரிசியை இடிச்சு வறுத்துப் போட்டு அசையாமல் இருக்கும்!

அம்மா சொன்ன போது அவள் முகத்தில் ஒரு பெருமை!

தாயைப் போல பிள்ளை! நூலைப் போல சேலை!

வகுப்பில் ஆசிரியை சொன்ன பழமொழி என் நினைவுக்கு வந்தது. அம்மாவிடம் அதைச் சொன்னேன்! அவள் சிரித்துக் கொண்டே இன்னொரு பழமொழி சொன்னாள்.

தாயைச் சந்தையுக்க கண்டால், மகளை வீட்டில போய்ப் பார்க்கத் தேவையில்லை.

இதுவும் நல்ல பழமொழி தான். அம்மா..... நீ படிக்காவிட்டாலும், தமிழ் மொழியை நன்றாகப் பயன்படுத்த தெரிந்து வைத்திருக்கிறாய்.

அம்மா உனக்கு இந்தப் பழமொழி எல்லாம் யார் சொல்லித் தந்தது?

வேறயார்!.... உன்ர அம்மம்மா தான்!

அம்மம்மா!.... அவ எனக்கு பெத்தா!.... எத்தனையோ பழமொழிகளைச் சொல்லும் பெத்தாவின் குரல்!.... அது அம்மம்மாவின் குரலாகக் கேட்டது. இப்ப நினைவுக்கு வந்தது.... இன்றைக்கு வகுப்பில கட்டுரை எழுத வேணும். அம்மா சொன்ன புதிய பழமொழியையும் பயன்படுத்தலாம்......

அம்மாவும், நானும் கதைச்சுக் கொண்டே வேலை செய்தோம். களைப்புத் தெரியவில்லை. அரிசி இடிச்சு முடியவும், திருந்தாதி மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

அம்மா ஆறு மணியாச்சு!

பரிமளா இண்டைக்கு எனக்குக் களைப்புத் தெரியவில்லயடி! சொல்லிக் கொண்டே அடுப்பை மூட்டி அம்மா மா வறுக்கும் பெரிய தாச்சிச் சட்டியை அடுப்பில் வைத்தாள். இடித்த மாவை அள்ளிப் போட்டு வறுக்கத் தொடங்கினாள். பச்சை மாவின் மணம் மாறி, நல்லதொரு மணம் வந்து மூக்கைத் தழுவியது. உரலடியில் ஒரு காக்கை பறந்து வந்து குந்தியது. அது ஒற்றைக் கண்ணால் எங்களிருவரையும் தலையை ஒரு புறமாய்ச் சாய்த்துப் பார்த்தது. பிறகு கரயத் தொடங்கியது. அம்மா சொன்னாள்!......

எனக்கு நன்மையெண்டால் நடந்து காட்டு! மற்றவருக்கு நன்மையெண்டால் பறந்துபோ!....

காகம் உரலிலிருந்து கீழே வந்து ஒய்ரமாக நடந்து காட்டியது. பிறகு கரைந்தது. அம்மா சொன்னாள் ஏதோ நல்ல விஷயம் இண்டைக்கு நடக்கப் போகுது..... அப்போது யாரோ கூப்பிடும் குரல் கேட்டது! தம்பி!...... தம்பி!...... (தொடரும்)

---

(சென்றவாரத் தொடர்ச்சி...)

***உங்கள் குழந்தைகளின் புத்திசாலித் தனத்தை வளர்ப்பதற்கான சில வழி முறைகள்.***

உங்கள் குழந்தையின் துருதுருப்பான கேள்விகள் அனைத்துக்கும் நேர்மையுடனும், பொறுமையுடனும் எரிச்சலின்றி பதில் கூறுங்கள்.



# குழந்தைக்காக...

குழந்தை எதற்காவது பயப்பட்டால், அதை அலட்சியப்படுத்தாதீர்கள். அந்த விடயம் குறித்து குழந்தையுடன் கதையுங்கள். பயத்துக்கான காரணத்தை தெரிந்து கொண்டு,




அதை அகற்ற முயற்சி செய்யுங்கள். குழந்தையின் கேள்விக்கு சரியான உண்மையான பதில்களைக் கூறுங்கள்.

குழுந்தை விளையாடுவதற்கோ, படிப்பதற்கோ, வரைவதற்கோ விரும்பினால் அதற்குரிய சூழ்நிலையை, இடத்தை உருவாக்கி கொடுங்கள். அந்த வேலையைச் செய்து முடியும் வரை இடையூறு செய்யாதீர்கள். பொறுமையுடன் காத்திருங்கள். அவர்கள் விளையாடிய இடம் அலங்கோலமாக இருப்பதற்காக கண்டிக்காதீர்கள். பிரச்சினையுடன் குழந்தை போராடும் போது, சுயமாகச் சிந்தித்து செயலாற்ற உதவுங்கள். சிக்கலைத் தானே முடிச்சவிழ்க்கப் பழக்குங்கள்.

குழந்தை முடிவெடுக்கும் போது, நீங்கள் குறுக்கிடாதீர்கள்.

குழந்தைகளின் வயதுக்கேற்ப பொறுப்புக்களை கொடுத்து, வேலை செய்யப்பழக்குங்கள். பால் வாங்குவது, புத்தகங்களை அடுக்கி வைப்பது, குளிர் சாதனப்பொட்டியில் காய்கறிகளை வைப்பது போன்ற செயல்களைச் செய்யும் குழந்தைகள் பொறுப்பான பெரியவர்களாக மாறுவார்கள்.

குழந்தைகளை வெளிச் சூழ்நிலைகளுக்கு பழக்கப்படுத்துவது அவசியம். வாகனங்களில் பயணம் செய்வது, வெளியிடங்களில் தங்குவது, பிறர் வீடுகளுக்குச் சென்று வருவது போன்றவை - குழந்தை சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தன் நடவடிக்கைகளை மாற்றவும், பழகவும் கட்டுபாட்டுடன் நடந்து கொள்ளவும் வழி வகுக்க வேண்டும்.

குழந்தைகள் ஏதும் வேலை செய்து முடித்தால், அவற்றில் குறை காணாதீர்கள் பாராட்டுங்கள். குறைகள் இருந்தால் எப்படித் திருந்துவது என்று மட்டும் சொல்லிக் கொடுங்கள். இது குழந்தைகளைப் பணியாற்ற உற்சாகமூட்டும்.

மற்றைய குழந்தைகளுடனும், வேறுமனிதர்களுடனும் பழகுவதற்கு ஊக்கம் கொடுங்கள்.

குழந்தையை எப்போதும் வேறொரு குழந்தையுடனும் ஒப்பிடக்கூடாது. அத்துடன் மட்டம் தட்டக் கூடாது. நீ எதற்கும் தகுதியில்லை, உன்னால் ஒன்றும் முடியாது என்று தீர்ப்புச் சொல்லக் கூடாது.

குழந்தைகளுக்கு புத்தகங்களை அறிமுகப்படுத்தவது மிகவும் அவசியமாகும். ஆரம்ப காலத்தில் படத்துடன் கூடிய கதைப் புத்தகங்களை வாசித்துக் காட்டவேண்டும். இதனால் புத்தகங்களை சிறுவர் வாசிப்பதற்கு இது தூண்டுகிறது.

குழந்தைகள் கதை சொல்லத் தூண்டுவதும், அவர்கள் பேச விட்டு கேட்பதும், அவர்களது கற்பனை வளத்தையும், படைப்பு ஆற்றலையும் வெளிக் கொண்டுவர உதவும்.

குழந்தையின் ஆற்றலைக் கண்டு பிடித்து அதனை வெளிக் கொணரத் தூண்டுவது எமது கடமையாகும். எதையாவது செய்யமுயற்சிக்கும் போது, தடை சொல்லாதீர்கள். தூர இருந்து செய்வதை குழந்தைக்குத் தெரியாமல் கவனித்துக் கொண்டிருந்தால் போதும்.

நாம் குழந்தையிடம் நம்பிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் வளர்க்கப்படும் குழந்தை நம்பிக்கையுடன் வளர வழி வகுக்கும்.

(தொடரும்....)

# வன்னிப் பிரதேச பாடசாலை அதிபர்களுக்கான 3 நாள் முகாமைத்துவ விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கிளிநொச்சி

மாகாணக்கல்வித் திணைக்களத்தால் வன்னிப் பிரதேச பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ விழிப்புணர்வுச் செயலமர்வு மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 12, 13, 14 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள் தொடர்பாகவும், நூலக அபிவிருத்தியினூடாக கல்வி அபிவிருத்தியை முன்னெடுப்பது தொடர்பான விடயங்களும் இடம் பெறவுள்ளன.

கிளிநொச்சி வலயத்தில் நூலக பெருவளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பாடசாலைகளின் அதிபர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு மாகாண நூலக பெருவளர்ச்சி அலகின், மாகாண நூலக இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ந. ஆனந்தராஜ் கேட்டுள்ளார்.

இந்தச் செயலமர்வில் மத்திய கல்வி அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலகம், தகவல் விஞ்ஞானத்துக்குமான தேசிய நிறுவகம், மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் பாடசலைகளின் அதிபர்கள் அல்லது கடமை நிறைவேற்றும் அதிபர்கள் தவிர்ந்த வேறு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்கள் பங்குபற்றும் அதிபர்களுக்கு கடமை லீவு, கொடுப்பனவு, உணவு என்பன வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் 42 அதிபர்களுக்கான செயலமர்வு - கிளிநொச்சியில் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையும், முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 45 பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு- மாங்குளம் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது என மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. விசாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

# மன்னார், வவுனியா மாவட்டங்களில் மிதிவெடி விழிப்பு வாரம் அனுஷ்டிப்பு

வவுனியா

கண்ணிவெடியற்ற நாட்டை உருவாக்கும் நோக்குடன், வன்னிப் பிரதேசத்தில் லட்சக்கணக்கில் புதைந்துள்ள மிதிவெடிகளை மீட்கும் மனிதாபிமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தவகையில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மிதிவெடி செயற்பாட்டு வாரம்- கடந்த திங்கட்கிழமை முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. யுனிசெப் அனுசரணையுடன் இந்தத் திட்டம் அமுல்செய்யப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக வவுனியா மாவட்ட யுனிசெப் பிரதித் திட்ட அதிகாரி சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன் தெரிவித்தார்.

மிதிவெடியின் அபாயம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், ஒருவாரமாக இந்த மாவட்ட மக்கள் மத்தியில் அறிவூட்டல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இறுதி நாளான நாளை மறுதினம் வவுனியா காமினி மகாவித்தியாலய மண்டபத்தில் மிதிவெடிகள் தொடர்பான கண்காட்சியும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# ஓமந்தை சோதனைச் சாவடிவரை ரயில் சேவை நீடிக்க நடவடிக்கை

வவுனியா

கொழும்பிலிருந்து வவுனியாவரை நடைபெற்றுவந்த ரயில் சேவையை, ஓமந்தை சோதனைச்சாவடிவரை நீடிப்பதற்குத் திட்டங்கள் தயாராக உள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் கொழும்பிலிருந்து வவுனியாவரை இடம்பெற்ற ரயில் சேவையை, ஓமந்தைவரை நீடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

இதன்படி வவுனியாவிலிருந்து ஓமந்தைவரையான ரயில் பாதை திருத்தியமைக்கப்பட்டு வருவதுடன், ஓமந்தையில் ரயில்வே நிலையமொன்று நிறுவப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து நேரடியாக பரிசீலனை செய்வதற்கு ரயில்வே திணைக்கள உயரதிகாரிகள் குழுவொன்று அண்மையில் இந்தப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# காஸ் சிலிண்டர் வெடித்து குடும்பப் பெண் உயிரிழப்பு!

கிளிநொச்சி

கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பகுதியில் காஸ் சிலிண்டர் வெடித்ததில், எரிகாயங்களுக்குள்ளான குடும்பப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று முன்தினம்அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கட்சன் வீதி - வட்டக்கச்சியைச் சேர்ந்த லோகேஸ்வரன் சுசிலா (வயது 37) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம்அதிகாலை சமையல் செய்வதற்காக காஸ் சிலிண்டரைபற்றவைத்தவேளை- அது வெடித்து, பெண்ணின் மீது தீப்பற்றிக் கொண்டது.

இவர் மீது பற்றிய தீயை கணவரும், அயலவர்களும் உடனடியாகவே அணைத்த பின்னர் வட்டக்கச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இவர், பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு சிகிச்சையளித்தபோதும், சிகிச்சை பலனளிக்காமல் அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். (09)

# பிரான்ஸ் மாநகரசபை உறுப்பினர்களால் மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

வடமராட்சி

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கு, பிரான்ஸ் நாட்டு மாநகரசபை உறுப்பினர்களாலும், அவர்களுடன் வருகை தந்தவர்களாலும் ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பிரான்ஸ் நாட்டு "மேரி துலா கூரனோ" மாநகரசபையின் உதவி மேயர் அன்ரோனி றூசல், மாநகரசபை உறுப்பினர் சுஸ்ற் சுவ்தியா மற்றும் கிதுன் எமலி, சீ அவ்வா, சரணியா, பிரான்ஸ் நாட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழக உப தலைவர் பாலச்சந்திரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி கிழக்கு தாளையடிப் பிரதேசத்துக்குச் சென்று, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதோடு, பாதிக்கப்பட்டவர்களுள் சிலருக்கு நான்கு மீன்பிடிப் படகுகள், அவற்றுக்கான வெளியிணைப்பு இயந்திரங்கள், மீன்பிடி வலைகள் ஆகியவற்றையும் வழங்கினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தாளையடிக் கரையோரத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு - வடமராட்சி கிழக்கு சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் யூட் தலைமை வகித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பிரான்ஸ் நாட்டு மாநகரசபை உதவி மேயர் அன்ரோனி றூசல், மாநகரசபை உறுப்பினர் சுஸ்ற் சுவ்தியா ஆகியோர் கருத்துரைகளையும் நிகழ்த்தினர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களின் துயரங்களை அறிந்து, தாங்கள் மிகுந்த கவலையடைந்ததாகவும், தங்களால் முடிந்த வரையிலான உதவிகளைச் செய்ததாகவும் குறிப்பிட்ட அவர்கள் - தாங்கள் நேரடியாக வந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட வேண்டுமென்ற ஆவல் காரணமாகவே இங்கு வருகைதர நேர்ந்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கையளிக்கப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் தாங்கள் வந்ததற்கான அடையாளமாகவே வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டனர். தொடர்ந்தும் தங்களாலான உதவிகளைச் செய்யப்போவதாகவும் தெரிவித்தனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூலை - 08

1497: கடலோடி வாஸ்கொடகாமா இந்தியாவுக்கான கடல் வழிப்பாதையைக் கண்டுபிடிக்க, 170 பேர்களுடன் ஸான்கேப்ரியல், பெர்ரியோ, ஸான்ரஃபேல் என்ற மூன்று கப்பல்களில் புறப்பட்டார்.

1809 : மனிதனின் உரிமைகள் என்ற நூலின் ஆசிரியரும், அமெரிக்க விடுதலைக்காகப் போராடியவரும், காமன் சென்ஸ் என்ற துண்டுப் பிரசுரத்தின் மூலம் மக்கள் மத்தியில் எழுச்சியை உண்டாக்கியவருமானதோமஸ் பெயின் காலமானார்.

1858 : இத்தாலியைச் சேர்ந்த செக்ச்சி என்பவர் ஸ்பெயினில் வைத்து முதன் முதலாக சூரிய கிரகணத்தை ஒளிப்படம் எடுத்தார்.

1884 : குழந்தைகளுக்கு கொடுமை இழைப்பதைத் தடுக்க, லண்டனில் தேசிய அமைப்பொன்று நிறுவப்பட்டது.

1889: குத்துச்சண்டைப் போட்டிகளில் கையுறை பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டது.

1899 : முதன் முதலாக அகில உலக மோட்டார் சைக்கிள் போட்டி இங்கிலாந்தில் நியூ பிரைட்டன் என்ற இடத்தில் நடந்தது. இதில் பிரான்ஸைச் சேர்ந்த பெக்கன்னெயில் என்பவர் வெற்றி பெற்றார்.

1905 : பிரான்ஸ், அமெரிக்காவின் பூரணமான ஆதரவுடன் மொராக்கோ பிரச்சினை தொடர்பில் ஜேர்மனியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட இணக்கத்தை வெளியிட்டது.

1920 : கிழக்கு ஆபிரிக்காவில் இருந்த குடியேற்றங்களது ஆட்சிப் பொறுப்பை பிரிட்டன் ஏற்றுக்கொண்டு, அந்தக் குடியேற்றங்களது பெயரை கென்யா என அமைத்துக் கொண்டது.

1939 : மனிதர்களது பாலியல் நடத்தைகள் பற்றிய ஏழு தொகுதிகளைக்கொண்ட ஸ்டடீஸ் ஒன் த சைக்கோலஜி ஒவ் செக்ஸ் என்ற புகழ்பெற்ற நூலை எழுதிய பிரிட்டிஷ் மருத்துவவியலாளர் ஹென்றி ஹேவ்லொக் எல்லீஸ் காலமானார்.

1969 : அமெரிக்கப் படைகள் வியட்நாமில் இருந்து படிப்படியாக வெளியேறும் என்ற அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன், தென் வியட்நாமிய ஜனாதிபதி தீயுவிடம் தெரிவித்தார்.

1978 : பீட்டர் ஹேப்லர் என்பவரும், ரெயின் ஹோல்ட் மெஸ்நெர் என்பவரும் முதன் முதலாக ஒட்சிசன் பயன்படுத்தாது எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியைச் சென்றடைந்தனர்.

1985 : தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும், இலங்கை அரசுப் பிரதானிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை பூட்டான் தலைநகர் திம்புவில் ஆரம்பமாகியது.

1991: அணு ஆயுத உற்பத்திக்கு அவசியமான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக, ஈராக் ஐ.நா.சபையில் ஒத்துக்கொண்டது.

1995 : சுகததாச உள்ளரங்கில் வைத்து, இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவால், யாழ்.பொதுசன நூல்நிலையப் புனரமைப்புக்கென்றுகூறி வெண்தாமரை இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# தொலைத் தொடர்பு நிலையம் முல்லைத்தீவில் திறந்து வைப்பு



முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தால் புதிய தொலைத்தொடர்புக் கோபுரம், கடந்த சனிக்கிழமை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பிரதம நிறைவேற்று அலுவலரால் திறந்து வைக்கப்பட்டது.

80 மீற்றர் கொண்ட இந்தத் தொலைத் தொடர்புக் கோபுரம் மூலம், முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் வட பிராந்தியப் பொறுப்பதிகாரி வி.யோகேந்திரன் தெரிவித்தார்.

இந்தத் தொலைபேசி இணைப்புகள் பிரதேச செயலகம் உள்ளிட்ட முக்கிய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு பிராந்திய பொறுப்பதிகாரி கனகசூரியர், ஸ்ரீலங்கா ரெலிக்கொம் திட்ட அலுவலர் குசும் ஜெயதிலக உட்பட, ஸ்ரீலங்கா ரெலிக்கொம் முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 500 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற*
*குலம்பற்றி வாழ்தும்என் பார்*

திருக்குறள்

## நமது நோக்கு

# அடங்கி நடக்க நேரிடும்!

தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோண மலை மண்ணை எப்படி ஆக்கிரமிக்கலாம் என்ற கனவுடன்தான் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் காத்திருக்கின்றன. மாவட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியின்போது சிங்களக் காடையர்கள் நடந்துகொண்டவிதம் அதைத்தான் புலப்படுத்துகிறது.

பாடசாலை மாணவர்களின் விளையாட்டு நிகழ்வைக் குழப்பி - அதை அரசியலாக்கி, இனவாதச் சேற்றுக்குள் புதைக்கும் கைங்கரியத்தைத்தான் சிங்களக் காடையர்கள் செய்துமுடித்திருக்கிறார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் எல்லைப்புறக் கிராமங்களை எல்லாம் குடியேற்றங்கள்மூலம் கபளீகரம் செய்துவந்த சிங்களப் பேரினவாத சக்திகளால் திருகோணமலையில் தொடர்ந்தும் தமிழ்மக்கள் வாழ்வதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

எல்லைப்புறங்களிலிருந்து துரத்திவிட்ட தமிழ்மக்களைப்போன்று, நகரப்பகுதியில் உள்ள தமிழ்மக்களையும் விரட்டியடித்துவிடவேண்டும் என்ற இலக்குடனேயே சிங்களப் பேரினவாத சக்திகள் காய்களை நகர்த்தி வருகின்றன.

விளர்த்திக்குளத்தில் விகாரை நிறுவ முயன்றமை, நகரப் பகுதியில் புத்தர் சிலை சட்டவிரோதமாக நிறுவியமை, சுனாமிக்குப் பின்னர் முற்றவெளி மைதானத்தில் சிங்களக் குடியிருப்புக்களை நிறுவமுயன்றமை மற்றும் தமிழ்மக்களுக்கு எதிரான தாக்குதல்களென்று - இந்த மூன்று ஆண்டுகால யுத்தநிறுத்த சூழலில், சிங்களப் பேரினவாதம் திருகோணமலையில் குழப்பங்களை உருவாக்கியே வந்திருக்கிறது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரவின் பின்னணியுடன் - சிங்களப் பேரினவாத சக்திகள் திருகோணமலையில் ஊக்கம்பெற்றிருக்கின்றன.

அவர்களே தமிழர் தாயகத்தின் தலைநகரில் புலிக்கொடி ஏற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவருவதோடு, சிங்கக் கொடிகளை வலுக்கட்டாயமாக ஏற்ற முயற்சித்தும் வருகின்றனர்.

சிங்கக் கொடி என்பது தமிழ் மக்களின் மனங்களில் ஒரு ஆக்கிரமிப்புச் சின்னமாகவே உருவெடுத்துவிட்டது. அந்தளவுக்கு அதன்பேரில் தமிழ்மக்கள் கொடுமைகளையும், துன்பங்களையும் அனுபவித்தனர்.

இப்படிப்பட்ட சூழலில் - மீண்டும் மீண்டும் திருகோணமலையில் சிங்கக் கொடிகளை ஏற்றி, 'நமோ நமோ மாதா' கீதம் இசைத்துவிட்டால், தமிழ்மக்களை அடிமையாக்கி விட்டதற்குச் சமம் எனக்கருதினால் அதைப் போல் முட்டாள்தனமானது வேறெதுவும் இல்லை.

இப்படி அத்துமீறி உள்நுழைந்து, விளையாட்டுப் போட்டிகளைக் குழப்பி சிங்கக் கொடியை ஏற்றிவிட் டால் மட்டும் - தமிழ் மக்கள் பயந்துபோய் விடுவார்கள் என்றோ, தமிழர் தாயகம் தமது கைக்கு வந்துவிடும் என்றோ அவர்கள் கனவு கண்டால் - அது ஒரு போதும் நடக்கவே நடக்காது.

ஏனெனில், தமிழ் மக்கள் ஒரு பலம்மிக்க படையான விடுதலைப் புலிகளின் பின்னால் நிற்கின்றனர். மக்கள் போராட்டமாக மாற்றம்பெற்றுவரும் தமிழர் விடுதலைப் போராட்டத்தில் - திருமலை தமிழ் மக்களும் ஆயுதமேந்தி நிற்கின்றனர் என்பதைப் பேரினவாதிகள் மறந்துவிடக் கூடாது.

விளையாட்டு நிகழ்ச்சியைக் குழப்பிய தினத்துக்கு முதல் நாள் மூதூரில் ஆயுதப்பயிற்சி பெற்ற 3000 கிராமியப் படையினருக்கான ஒன்றுகூடல் சேனையூரில் நடைபெற்றிருந்தது.

ஒரு பிரமாண்டமான மக்கள்படை திருமலை மண்ணிலும் உருவாக்கப்பட்டுவிட்டதென்ற செய்தி பேரினவாத சக்திகளுக்கு இனிப்பானதாக இருக்கப்போவதில்லை.


எல்லைப்புற ஆக்கிரமிப்புக்கு ஆட்சியாளர்கள், ஊர்காவல் படையினர் என்ற பெயரில் சிங்கள மக்களை ஆயுதமேந்தவைத்தனர்.

இன்று- சிங்கள ஆக்கிரமிப்பில் இருக்கும் தமிழ் மக்கள் தமது கிராமங்களைப் பாதுகாக்க - ஆயுதமேந்தி கிராமியப் படையாக நிற்கின்றனர். இந்த மாற்றம் எதிர்காலத்தில் திருமலை மண்ணை சிங்களப் பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்க நிச்சயம் உதவப் போகிறது.

எப்படியாவது திருமலையில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு - தமிழர் தலைநகரிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்ற குறியுடன் செயற்பட்டுவரும் சிங்களப் பேரினவாத சக்திகள் - இனிமேலாவது தம்மை அடக்கிக் கொள்ளவேண்டும்.

இல்லையேல் - அவர்கள் அடங்கிப் போகும் நிலையை திருமலைத் தமிழ் மக்கள் நிச்சயம் உருவாக்கு வார்கள்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தமிழர்களிடமிருந்து திருமலையை "தட்டிப் பறிக்க" சிங்கள அத்துமீறல்கள்!

திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் - காடையர்கள் சிலர் புகுந்து, சிங்கக் கொடியேற்றிக் குழப்பம் செய்திருப்பது நல்ல அறிகுறியாகத் தெரியவில்லை என்று சொன்னபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

திருகோணமலையில் எப்படியாவது ஒரு பெரும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குச் சிலர் பாடாய்ப் படுகின்றார்கள். கடற்கோள் அனர்த்தம் ஏற்பட்டகையோடு சில சிங்களக் குடும்பங்களைப் பலவந்தமாகக் கொண்டு வந்து, திருகோணமலை முற்ற வெளியிலேயே குடியேற்றுவதற்கு ஜே.வி.பி ஏற்பாடு செய்தது. மக்கள் விழிப்புடனிருந்ததால் இந்தக் குடியேற்றம் நடைபெறாமல் தடுக்கப்பட்டது என்றேன்.

இதுமட்டுமா இந்தக் குடியேற்றத்திட்டம் வெற்றியளிக்காமல் போனதும் திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கருகே முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடத்தில் நள்ளிரவில் திடீரென்று ஒரு புத்தர் முளைத்தார். இந்தத் திடீர் புத்தர் சிலையை வைத்து இனக்கலகம், மதக்கலகத்தைத் தூண்டி விடுவதற்கும், இந்தப் பழியை விடுதலைப்புலிகள் மீது சுமத்துவதற்கும் திட்டம் போட்டார்கள். இப்பொழுது பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டிக்குள் அத்தமீறிப் பிரவேசித்து குழப்பம் ஏற்படுத்துவதற்கு முயற்சி நடத்துகிறது என்று பரமசிவம் சொன்னார்.

சிங்களக் காடையர்கள் விளையாட்டுப் போட்டிகளின் இடைநடுவில் அத்துமீறிப் புகுந்து, ஆர்ப்பாட்டம் செய்ததால், போட்டிகள் இடை நிறுத்தப்பட்டதுடன், மாணவர்களும் வெளியேறிச் சென்றுவிட்டனர். இதனால் பெரும் குழப்பம் ஏற்படாதவாறு மேலதிகக் கல்விப் பணிப்பாளர் சமாளித்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இந்த விளையாட்டுப் போட்டி நடைபெறும் போது அங்கு பாதுகாப்புக்காக நின்ற காவல்துறையினர், காடையர்களின் அத்துமீறிய செயல்களைப் பார்த்தும், பார்க்காதமாதிரி இருந்திருக்கின்றார்களே என்றேன்.

தமிழ் மக்களுக்கெதிராக என்ன நடந்தாலும், காவல் துறையினர் கண்டும் காணாமலிருப்பது இதுதான் முதல் தடவையல்ல.

1956 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து நாடாளு மன்றத்தின் முன்பாக காலிமுகத்திடலில் தமிழ்த் தலை வர்களும், நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் அமைதியாக சத்தியாக்கிரகம் செய்தனர்.

அந்தச் சமயத்திலும் சிங்களக் காடையர்கள் இடையில் புகுந்து தலைவர்களையும், தொண்டர்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கிய சமயத்திலும், அங்குசென்ற காவல்துறையினர் கண்டும் காணாதது போல்தான் நின்றனர். அப்படி அவர்களை நிற்கச் சொல்லி மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் மக்களுக்கு எதிரான எந்தக் காடைத்தனத்தையும் காவல் துறையினர் கண்டும் காணாமல்தான் இருந்து வருகின்றனர் என்று பரமசிவம் சொன்னார்.

திருகோணமலையைத் தமிழர்களிடமிருந்து துண்டித்துவிட வேண்டுமென்பது சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளின் நீண்டகாலத் திட்டம். இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கா கிழக்குமாகாணத்தைத் தமிழர்களிடமிருந்து பிரிக்கும் நோக்கத்துடனேயே உணவில் தன்னிறவு என்ற போர்வையில் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தொடங்கினார். இவருக்குப்பின் வந்தவர்கள் இதைத் தொடர்ந்து தீவிரமாகச் செயற்படுத்தினர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவோ வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதற்கென்றே மணலாற்றில் சிங்களவர்களைக் குடியேற்றி இராணுவ முகாமும் அமைத்து, அந்த இடத்தின் பெயரையே வெலிஓயா என்று மாற்றி வைத்தார். என்று நான் சொன்னேன்.

இப்போது நவீன தேசபக்தர்களாக உருவெடுத்திருக்கும் ஜே.வி.பியினரும், ஹெல உறுமய பிக்குகளும், சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளும் திருகோணமலை சிங்களவர்களுக்கே சொந்தம் என்பதற்குத் தினமும் புதிய புதிய ஆய்வுகளைத் தோண்டி எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். வெள்ளைக்காரர்கள் சிலர் முன்னரே சிங்களவர்கள் திருகோணமலையில் இருந்திருக்கிறார்களென்பதை ஆதாரத்துடன் எழுதிவைத்திருந்ததாக இப்போது கட்டுரைகள் வெளியிடுகின்றனர். இராவணனே சிங்கள மன்னன் என்றும் எழுதுகின்றனர் என்று பரமசிவம் சொன்னார்.

திருகோணமலை சிங்கள பௌத்தர்களுக்குத்தான் சொந்தம் என்று இவர்கள் நிரூபிப்பதற்கு முயற்சி செய்வதுடன், புத்தவிகாரைகளைப் புதிதாக அமைக்கவும் சிங்களக் குடியேற்றத்தை அதிகரிக்கவும் திட்டமிட்டுச் செயற்படுத்த முனைகின்றனர். இதுமட்டுமல்ல, முஸ்லிம்களும் அங்கு முன்னர் இருந்தார்கள் என்று எழுதி இப்பொழுது அவர்களுடைய ஆதரவையும் பெற்றுத் தமிழர்களைத் திருமலையிலிருந்து அகற்றுவதே சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளின் திட்டமாகும். தமிழர்களுக்குத் திருகோணமலை சொந்தமல்ல என்று நிரூபித்து, சிங்களமயமாக்க வேண்டும். இல்லையேல் இந்தியாவையோ, அமெரிக்காவையோ திருமலையை ஆக்கிரமிக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் அவர்களின் திட்டம் என்றேன்.

பாடசாலை விளையாட்டுப் போட்டிக்குள் அத்துமீறிச் சிங்களக் கொடி ஏற்றியவர்கள் இனி வேறு பல அத்துமீறல்களுக்கும் திட்டம் வைத்திருக்கக்கூடும். நான்காவது ஈழப்போரைத் திருகோணமலையில் தான் தொடங்கப் போகிறார்களோ தெரியவில்லை என்றார் பரமசிவம்.

களவும், கொள்ளையும், காடைத்தனமும் மலிந்துள்ள இந்த நாளில், இப்படியும் உத்தமர்கள் வாழ்கிறார்களா என்று சொல்லக் கூடியதாக ஒரு சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

சங்கிலிகள், காப்புகள், அட்டியல்கள், மோதிரங்கள் என 75 பவுண் எடையுள்ள நகைகள் கொண்ட ஒரு பொதியை வழியில் கண்டெடுத்த ஒரு ஏழை வியாபாரி, அதை உரியவரிடம் சேர்ப்பித்து, வறுமையில் வாழ்ந்தாலும், பிறர் சொத்துக்கு ஆசைப்படாத நல்ல உள்ளங்கள் இன்னமும் மறைந்துவிடவில்லை என்பதைப் பறைசாற்றியிருக்கிறார். மருதனார்மடம் சந்தை வாழைக்குலை வியாபாரி கந்தையா அருளாநந்தம் அவரை "நீ வாழ்க" என்று வாழ்த்த வேண்டும் என்று நான் சொன்னேன்.

ஏழையாக இருந்ததால் அவர் இதை உரிய வரிடம் கொடுத்தார். பணக்காரராக இருந்தால் பணத் தோடு பணம் சேரவே கிடைத்தது என்று தனது கணக்கில் சேர்த்திருப்பார் என்று பரமசிவம் சொல்லியபடி நடந்தார்.

# இந்த வார பலன்

## 08.07.2005 - 14.07.2005 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் ராகு | | | சூ |
| யுரே. | 09 இ. 01 - 39 சிங் - சந் | | புத, சுக் சந், சனி |
| நெப் | 12 ப. 02 - 07 கன் - சந்<br>14 இ. 12 - 28 துல - சந் | | |
| | | | குரு கேது |

### மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் அடிக்கடி பாதிக்கப்படும். பிணக்குகள் அதிகரிக்கும். செலவுகள் அபரிமிதமாக இருக்கும். வருவாய் குறைவாகவே இருக்கும். கடன் தொல்லைகளும் வரும். தேகசுகமும் அடிக்கடி பாதிக்கப்படும். மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்திலுள்ளவர்கள் அதிகாரிகளின் அவநம்பிக்கைக்கு ஆளாக வேண்டியிருக்கும். சகாக்களால் தொல்லைகள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு பொருள் நட்டங்களும், வீண் விரயங்களும் ஏற்படலாகும். வாடிக்கையாளர்கள் குறையும். தொழிலாளர்களிடையே ஒற்றுமை குலையும். புதிய ஒப்பந்தங்கள் கைகூடாது. மாணவர்கள் தேவையற்ற விடயங்களில் தலையிட்டுச் சிக்கலை ஏற்படுத்திக் கொள்ளர்.

### இடபம்

**(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங் கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)**

இடபராசிக்காரர்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமை இருக்கும். வருவாய் திருப்தியாக இருக் கும். புத்திரர்களால் நன்மைகள் உண்டு. எடுக்கும் கருமங்கள் எளிதில் கைகூடும். இனபந்துக்களுடன் உறவு சீராக இருக்கும். மங்கள கருமங்கள் விரைவில் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு செய்யும் பணிகள் வெற்றியளிக்கும். சக உதவிகள் கிட்டும். அதிகாரிகளும் ஒத்துழைப்பு நல்குவர். வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகள் சுறு சுறுப்புக் காணும். புடவை வியாபாரிகள் கூடுதல் லாபம் காண்பர். தொழிலாளர்களுக்கு தொழில் விருத்தியடையும். வருவாய் சிறக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர்.

### மிதுனம்

**(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர் பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )**

மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். வாழ்க்கைத்தரம் உயரும். புத்திரர்களால் மகிழ்ச்சி கிடைக்கும். சிலருக்கு வீட்டில் சுப நிகழ்வுகள் நிகழும். பொருள் வரவு திருப்தியாக இருக்கும். மங்கள கருமங்கள் மகிழ்ச்சியுடன் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வேலைப்பளு இருப்பினும், சக உதவியாளர்களால் சமாளிக்க முடியும். வியாபாரிகளுக்கு அரச உதவிகள் கிடைக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பழைய கடன் நிலுவைகள் வந்து சேரும். தொழிலாளர்களுக்கு முதலாளிகளின் ஆதரவு கிடைக்கும். புதிய தொழில்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வி முன்னேற்றம் காண்பர். ஆசிரியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

### கடகம்

**(புனர் பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். வாழ்க்கைத் தரம் உயரும். புத்திரர்களால் உதவியும் , மகிழ்ச்சியும் உண்டு. எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். விவாகப் பேச்சுக்கள் மகிழ்ச்சியுடன் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு இருக்கும். பலரினதும் பாராட்டுக்கள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். செல்வாக்கு உயரும். வர்த்தகர்களுக்கு வங்கி உதவிகள் கிடைக்கும். வியாபாரம் பெருகும். கடன் பாக்கிகள் கைக்கு வந்துசேரும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். புதிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும். மாணவர்கள் கல்வி முன்னேற்றம் பெறுவதுடன், பரீட்சையிலும் சித்திபெறுவர்.

### சிங்கம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

சிங்க ராசியினருக்கு குடும்பத்தில் நிம்மதியின்மை காணப்படும். சச்சரவுகள், கவலைகள் அதிகரிக்கும்.வருமானம் குறைந்து, செலவுகள் அதிகமாகும். நினைத்த கருமங்களில் தடைகள் ஏற்படும். எதிர்பாராத தொல்லைகள் வந்து சேரும். மங்கள கருமங்கள் இழுபறி நிலைகளிலேயே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத நெருக்கடிகள் ஏற்படும். வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். ஒத்துழைப்பின்மை வேதனையைக் கொடுக்கும். வர்த்தகர்களுக் வியாபாரம் மந்தநிலை காட்டும். கடன் வியாபாரங்களையும், புதிய முதலீடுகளையும் நிறுத்திக் கொள்வது நன்று. வங்கி உதவிகளும் தேவைக்கு வந்து சேராது. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமையீனங்கள் காட்டும். தொழில் பிணக்குகளும் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். விளையாட்டுக்களில் ஆர்வம் மிகும்.

### கன்னி

**(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)**

கன்னிராசிக்காரருக்கு குடும்பச் சிறப்பும் ,நல்லுறவும் வளரும். பணவருவாய் அதிகரிக்கும். பலவகையாலும் பணம் சேரும். புத்திரர்களால் நன்மை கிட்டும். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். மங்கள கருமங்கள் மனம்போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க ஆதரவுகள் , ஒத்துழைப்புகள் கிடைக்கும். பதவி உயர்வும் வந்து சேரும். வர்த்தகர்களுக்கு நிதிநிலைமை சீராக இருக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் ஒப்பந்தங்கள் கூடுதலாகக் கிடைக்கும். வருவாய் சிறக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னிலை வகிப்பர்.

### துலாம்

**(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)**

துலாராசிக்காரருக்கு குடும்ப நிலை சுமுகமாக இருந்தாலும், இடையிடையே கருத்து வேறுபாடுகளும் இருக்கும். அநாவசியச் செலவுகள் அதிகரிக்கும். தேகசுகம் சிறிது பாதிக்கப்படலாம். பேச்சுவார்த்தைகளை அளந்து பேசிக் கொள்ளவேண்டும். மங்கள கருமங்கள் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். இடமாற்றங்களும் ஏற்படலாம். அதிகாரிகளுக்கேற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமாகவே இருக்கும். விற்பனை லாபங்கள் குறையும். தொழிலாளர்கள் மத்தியில் அமைதிக் குறைவு ஏற்படலாம். மாணவர்கள் சொந்த முயற்சிகேற்ப பலன் காண்பர்.

### விருச்சிகம்

**(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப ஒற்றுமை நன்று. பணவருவாய் திருப்தி தரும். புத்திரர்களால் உதவி கிடைக்கும். வீட்டில் மங்கள நிகழ்வுகள் ஏற்படும். இன பந்துக்களின் வரவால் குதூகலம் காணும். மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். அதிகாரிகள் கௌரவமாக நடந்து கொள்வர். வியாபாரிகளுக்கு வர்த்தகம் சுறுசுறுப்புடன் இயங்கும். நிறைந்த லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளிகள், முதலாளிகள் நல்லுறவு விருத்தியாகும். வேலை வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமும், கௌரமும் ஏற்படும்.

### தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

தனுசு ராசியினருக்கு குடும்பத்தில் மனக்கஷ்டங்கள் ஏற்படும். ஆடம்பர அநாவசியச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். வருவாய் குன்றும். தேகசௌக்கியம் பாதிக்கப்படுவதால், வைத்தியச் செலவுகள் மேலோங்கும். மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். அதிகாரிகள் கடுமையாக நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படும். இலாபங்கள் மட்டுப்படுத்தப்படும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர் மத்தியில் பிணக்குகள் ஏற்பட லாம். புதிய தொழில் வாய்ப்பு கள் குறையும். மாணவர்களுக்குக் கல்வியில் நாட்டம் குறையும். தேவையற்ற தலையீடுகளைத் தவிர்க்கவும்.

### மகரம்

**(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)**

மகர ராசியினருக்கு குடும்பத்தில் ஒற்றுமை நன்றாக இருக்கும். வருவாய் திருப்திகரமாக இருக்கும். இன பந்துக்கள் உறவு வலுக்கும். புத்திரர்களால் உதவி இருப்பினும், தொல்லைகளும் உண்டு. மங்கள கருமங்கள் இழுபறியின் மேல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு சகஊழியரின் ஒத்துழைப்புக் கிடைத்தாலும், வேலைப் பலு அதிகமாகவே இருக்கும். பதவி உயர்வுகள் தாமதமாகலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். வாடிக்கையாளர்களைக் கவரக் கூடியதாக இருந்தால், வியாபாரம் சிறப்படையும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

### கும்பம்

**(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)**


கும்பராசியினருக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். குடும்ப அங்கத்தவரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். புத்திரர்களின் உதவிகள் கிடைக்கும். வீட்டில் மங்கள நிகழ்வுகள் ஏற்படும். வருவாய் பல வகையாலும் வந்துசேரும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவு பெறும். மங்கள கருமங்கள் கைகூடி, புதுவாழ்வு ஆரம்பிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு அதிகரிக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கலாம். சக ஒத்துழைப்புகள் சிறப்பாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். முதலீடுகளால் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். ஆபரண தொழிலாளர் கூடிய லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். அதிக பயன் பெறுவர். மாணவர்கள் கல்வியில் முன்னணி வகிப்பர். சிலருக்கு தொழில் வாய்ப்புகள் கிட்டும்.

### மீனம்

**(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

மீனராசியினருக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக இருந்தாலும், இடையிடையே மனவேறுபாடுகளும் ஏற்படும். பணவருவாய் ஓரளவு திருப்தி தரும். உறவினர்களுடன் சேர்ந்து கொள்வதால், நன்மை உண்டு. கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். மங்கள கருமங்கள் கால தாமதத்தின் பின்நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பலு அதிகமாகும். எனினும் சக உதவியுடன் சமாளிக்க முடியும். அதிகாரிகளுக்கேற்ப நடத்தல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். பிரயாசைக்கேற்பலாபமுண்டு. தொழிலாளர் முயற்சி செய்வதன் மூலம், வருவாயைப் பெருக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறைவு. முயற்சி தேவை.

## நூல் அகம்




நூலின் பெயர் :- கலை மலர்
வெளியீடு :- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (முத்தமிழ் மன்றம்)
இதழாசிரியர் : - ம.பிரபாகரன்
துணை இதழாசிரியர் :- செல்வி.சி.யசோதா

கல்விச் சமூகத்தில் கல்வி வழிகாட்டிகளாக விளங்குகின்ற ஆசான்களைப் பெற்றெடுக்கின்ற கலைக்கூட மாதாக்களில் ஒன்றாக விளங்குவதே, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆகும். இந்தக் கலாசாலையானது - அறிவுகொண்ட, ஆளுமைகொண்ட ஆசான்களை வளர்த்தெடுப்பதற்காகப் பல செயற்திட்டப் படிமுறைகளை உருவாக்கியுள்ளது. அந்த வரையறைக்குள் அமைந்த ஒரு செயற்பாடுதான் இந்தக் கலைமலர் வெளியீடாகும்.

2004 - 2005 இற்குரிய இந்த நூலின் அட்டைப் படத்தை நோக்கும்போதே சமூகக் கட்டமைப்பின் சாட்சியங்களாகளுக்கூடாக ஒரு பொது நிறுவனத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சர்வமத, சமப்பண்பு வெளிப்பட்டு நிற்கிறது. கலை மகளின் இருப்பிடத்துக்கு ஆதாரமாக கலைக்கூட நுழைவாயில் இந்த அட்டைப் படத்தில் வெளிப்பட்டு நிற்கிறது.

படைப்பாற்றல் என்பது –ஆசிரியர் சமூகத்துக்கு இன்றியமையாத ஒன்று. இந்தப் படைப்பாற்றலை ஆசிரியர்கள் மத்தியில் வளர்த்தெடுப்பதற்கு இந்த நூல் பெரிதும் உதவும் என்பது இங்குள்ள ஆசிரியரின் படைப்பு வெளிப்பாட்டினூடாகப் புலப்பட்டு நிற்கிறது.

வெறுமனே கலைத்திட்ட அமைப்புகளால் மாத்திரம் மாணவர்களில் விருத்தியேற்படக்கூடாது. அறிவு, திறன், மனப்பாங்கு போன்ற புதிய கல்விச் சீர்திருத்த அடிப்படை, எண்ணக்கருவினூடாவும் விருத்திப்பாங்கு மாணவர்களிடத்தில் ஏற்படவேண்டுமாயின், இப்படிப்பட்ட படைப்பு வெளிப்பாடுகள் மூலம் ஆசிரியர்கள் வளர்க்கப்பட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும்.

கலாசாலை ஆசிரிய, மாணவர்களின் படைப்பாற்றலை வளர்ப்பதற்கும், இந்தப் படைப்பாற்றலுக்கான தேடல்களை விருத்தி செய்வதற்கும் இந்த நூல் உதவுவதோடு, கல்வியியல் சமூகத்துக்கான பல அறிவியல் தேவைகளைப் பூர்த்திசெய்கிறது.

பாடசாலை உட்பட்ட பல கல்விச் சமூகத்தினருக்குப் புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய போதிய விளக்கங்கள் இல்லாத நிலையுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த வழிகாட்டி நூல்களே உதவுகின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்த நூலில் பல கல்விக் கட்டுரைகள், பொதுவான கட்டுரைகள், நேர்காணல்கள், கவிதைகள், பெரியார்களின் கல்விப் பணிகள், தொழிற்துறைசார் கட்டுரைகள் போன்றன விருந்தாக அமைந்துள்ளன. இதைவிட முன்பக்கத்தில் மலர் விபரமும் தொடர்ந்து கலாசாலை கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்மொழி வாழ்த்து மற்றும் மேலதிக ஆணையாளர் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர், கலாசாலை முதல்வர், துணை முதல்வர்களின் வாழ்த்துச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. இதைவிடப் புகைப் படங்கள் இந்த நூலை மெருகூட்டும் விடயமாக அமைந்துள்ளது.

யாழ்.மண்ணில் காலத்தால் முற்பட்ட கலாசாலை எனும் பெருமை வாய்ந்த இந்தக் கலாசாலை, ஆண்டு தோறும் வெளியிடும் இந்த மலரால் பலவகைப்பட்ட அறிவுப் பசிதீர்க்கும் பொக்கிசங்கள் கல்விச் சமூகத்துக்கு அள்ளி வழங்கப்படுகிறது. அந்த வகையில் கலாசாலை நிர்வாகக் கட்டமைப்புக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் இந்தக் கல்விச் சமூகம் நன்றிக்கடன்பட்டுள்ளது என்றால், அது மிகையாகாது.

**ஆர்.கே.மேனன்**

# ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய்க்கு தடைஊசி மருந்தேற்றும் நிலையங்கள்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட நிலையங்களில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து கீழ்வரும் இடங்களில் நாளையும், எதிர்வரும் 23ஆம் திகதியும், இரண்டு சுற்றுக்களாக் வழங்கப்படவுள்ளன.

காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை ஒரு வயது தொடக்கம்10 வயதுக்குட்பட்ட சகலகுழந்தைகளுக்கும் இந்த மருந்து வழங்கப்படவுள்ளதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - சாவகச்சேரி**

நாவற்குழி - கு.அ.சே.உ. பணிமனை, தச்சன்தோப்பு கி. நிலையம், கைதடி வடக்கு - அம்பிகை மாதர் சங்கம், கைதடி தெற்கு - மத்திய மருந்தகம் கைதடி, மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை வாசிகசாலை, மட்டுவில் தெற்கு ஆரம்ப சுகாதார நிலையம், சரசாலை - கிராமோதய நிலையம், மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையம், நுணாவில் - பொது நூலகம், கல்வயல் கு.அ.சே.உ. அலுவலகம், நகரசபை - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சங்கத்தானை - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கச்சாய் - ஆரம்ப சுகாதார நிலையம், அல்லாரை வெள்ளாம் போக் கட்டி, மீசாலை வடக்கு - புத்தூர்ச்சந்தி, கொடிகாமம் கச்சாய் கிராமோதய நிலையம், உசன் - ஆரம்ப சுகாதார நிலையம், தவசிகுளம் - தவசிகுளம் பகல் பராமரிப்பு நிலையம், திருசுவில் - ம.ம.ம.ம. கொடிகாமம், வரணி தெற்கு - குடமியன் வாசிகசாலை, வரணி வடக்கு - ம.ம.ம.ம. வரணி, வரணி மத்தி - ம.ம.ம.ம வரணி.

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - தெல்லிப்பளை**

ம.ம.ம.ம அளவெட்டி - பன்னாலை; அளவெட்டி - அளவெட்டி தெற்கு, பன்னாலை; மா.வை.தெல்லிப்பளை - தெல்லிப்பளை; மல்லாகம் - மல்லாகம் மத்தி, மல்லாகம் வடக்கு; மத்திய மருந்தகம் - ஏழாலை தெற்கு; ஏழாலை தெற்கு - ஏழாலை வடக்கு; மத்திய மருந்தகம், புன்னாலைக் கட்டுவன் - வசாவிளான்; வசாவிளான் - குப்பிளான்; இளவாலை - புன்னாலைக்கட்டுவன்; மத்திய மருந்தகம் - சுன்னாகம் தெற்கு; சுன்னாகம் - சுன்னாகம் வடக்கு; கந்தரோடை - கந்தரோடை; தாவடி ஆரம்ப சுகாதார நிலையம் - தாவடி; மத்திய மருந்தகம் இணுவில் - இணுவில் வடக்கு; தாவடி - இணுவில் தெற்கு; மத்திய மருந்தகம் உடுவில் - உடுவில் தெற்கு; மல்வம் - உடுவில் வடக்கு; ஆரம்ப சுகாதார நிலையம் சுன்னாகம் - உடுவில்.

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மானிப்பாய்.**

சுற்றியல்கூறு - சங்கானை; ஆரம்ப சுகாதார நிலையம் - பண்ணாகம்; மத்திய மருந்தகம் - தொல்புரம், மத்திய மருந்தகம் - வட்டுக்கோட்டை, கிராமிய வைத்தியசாலை - வட்டுக் கோட்டை; வை.எம்.சி.ஏ. - நவாலி; ஆரம்ப சுகாதார நிலையம் - மூளாய்; ம.ம.ம.ம - மானிப்பாய்; ஆரம்ப சுகாதார நிலையம் - சா்வற்காடு; கிராம அபிவிருத்திச்சபை - கட்டுடை; கிராம அபிவிருத்திசபை - ஆனைக்கோட்டை; கிராமோதய சென்ரர் - ஆலங்குளாய்; கிராமோதய சென்ரர் - பிரான்பற்று; மத்திய மருந்தகம் - இளவாலை; கிராமிய வைத்தியசாலை - பண்டத்தரிப்பு; கிராமோதய சென்ரர் - சுதுமலை.

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊர்காவற்றுறை**

மாவட்ட வைத்தியசாலை - ஊர்காவற்றுறை; ஆரம்ப சுகாதார நிலையம் - புளியங்கூடல்; ஆரம்ப சுகாதார நிலையம் - நாவாந்துறை; சுற்றயல் கூறு - காரைநகர்; வாரியர் வளவு - காரைநகர்; சுற்றயல் கூறு - அனலைதீவு; ஆரம்ப சுகாதார நிலையம் - எழுவைதீவு; ஆரம்ப சுகாதார நிலையம் - மண்டைதீவு; ஆரம்ப சுகாதார நிலையம் - அல்லைப்பிட்டி; கிராமிய வைத்தியசாலை - வேலணை; ஆரம்ப சுகாதார நிலையம் - சரவணை; மாவட்ட வைத்தியசாலை - புங்குடுதீவு; சுற்றயல்கூறு - நயினாதீவு; மாவட்ட வைத்தியசாலை - நெடுந்தீவு; நெடுந்தீவு வடக்கு.

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - பருத்தித்துறை.**

கற்கோவளம் - கற்கோவளம், மாதனை; பருத்தித்துறை கிழக்கு - 4ஆம் குறுக்குத்தெரு; பருத்தித்துறை மேற்கு - சிகிச்சை நிலையம்; புலோலி மேற்கு - கதிரவேற்பிள்ளை வாசிகசாலை; அல்வாய் வடக்கு - ஆரம்ப சுகாதார நிலையம் வியாபாரி மூலை; வல்வெட்டித்துறை - மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை; கம்பர்மலை - கலைவாணி சனசமூக நிலையம்; தொண்டமானாறு - ஆரம்ப சுகாதார நிலையம் தொண்டமானாறு; உடுப்பிட்டி - உடுப்பிட்டி வாசிகசாலை; இமையாணன் - இணையாளன் மாதர்சங்கம்; அல்வாய் மேற்கு - அல்வாய் சிகிச்சை நிலையம்; அல்வாய் தெற்கு - கிராம மோதய சென்ரர்; வதிரி - வதிரி சிகிச்சை நிலையம்; கரணவாய் வடக்கு - ஆரம்ப சுகாதார நிலையம் கொற்றாவத்தை, உடுப்பிட்டி கிராமோதய சென்ரர்; புலோலி தெற்கு, துன்னாலை வடக்கு - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை; சோளங்கன் - சோளகங்கன் சனசமூக நிலையம்; கரணவாய் தெற்கு - மணியகாரன் தோட்டம்; துன்னாலை தெற்கு - கட்டைவேலி சிகிச்சா நிலையம்; கரவெட்டி தெற்கு - விக்கினேஸ்வரா; கரவெட்டி மேற்கு - ம.ம.ம.ம கரவெட்டி; அம்பன் - ம.ம.ம.ம அம்பன், மணற்காடு; கப்புது - கப்புது.

**மருதங்கேணி**

கட்டைக்காடு - கட்டைக்காடு பொது மண்டபம்; வெற்றிலைக்கேணி - வெற்றிலைக் கேணி பாடசாலை; உடுத்துறை - திலீபன் மருத்துவமனை, ஆழியவளை; செம்பியன்பற்று - கிராமிய வைத்தியசாலை, மருதங்கேணி, மாமுனை.

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - கோப்பாய்.**

கிராம அபிவிருத்திச் சங்கம் - இத்திக்கலட்டி; சுற்றயல் கூறு - அச்சுவேலி; மத்திய மருந்தகம் - புத்தூர்; ஆரம்ப சுகாதார நிலையம் - வாதரவத்தை; கிராம அபிவிருத்திச் சங்கம் - சிறுப்பிட்டி; கிராம அபிவிருத்திச் சங்கம் - நீர்வேலி; ஆரம்ப சுகாதார நிலையம் - அச்சுவேலி; ஆரம்ப சுகாதார நிலையம் - ஊரெழு; மத்திய மருந்தகம் - உரும்பிராய்; சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - கோப்பாய்; ஆரம்ப சுகாதார நிலையம் - இருபாலை: கிராம அபிவிருத்திச் சங்கம் - கட்டப்பிராய்; கலாமன்றம் - திருநெல்வேலி; ம.ம.ம.ம. கோண்டாவில்; மத்திய மருந்தகம் - கொக்குவில்; கிராம அபிவிருத்திச்சங்கம் - கொக்குவில் வடக்கு; கிராம அபிவிருத்திச் சங்கம் - அரியாலை.

**யாழ். மாநகரசபை நிலையங்கள்**

சுவாமியாரி வீதீ சிகிச்சை நிலையம்; பாஷையூர் மகப்பேற்று நிலையம்; குருநகர் சி.டி.எம்.எச்.; அரியாலை மகப்பேற்று நிலையம்; நல்லூர் சிகிச்சை நிலையம்; கந்தர்மடம் சிகிச்சை நிலையம்; வண்ணார் பண்ணை சிகிச்சை நிலையம்; நாவலர் வீதி மகப்பேற்று நிலையம்; யூபிலி மகப்பேற்று நிலையம்; யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்.

# சாவகச்சேரி வைத்தியசாலை கட்டட வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் சேதமான சாவகச்சேரி மருத்துவமனையில் நிகொட் நிறுவனத்தால் கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

நிகொட்டின் கார்ப் திட்டத்தின்கீழ் சாவகச்சேரி மருத்துவமனையில் நிர்வாகக் கட்டடம், நோயாளர் விடுதி, நீர்த்தாங்கி என்பன அமைப்பதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான அனுமதி நிகொட்டுக்கு கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் சாவகச்சேரி மருத்துவமனையில் உள்ள நோயாளர் விடுதிகள், நிர்வாக கட்டடங்கள் உட்பட பலவும் சேதமாகி இருந்தது. தற்போது எஞ்சியுள்ள கட்டடப் பகுதியிலேயே நோயாளர் விடுதிகள் மற்றும் நிர்வாக பகுதிகள் என்பன இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் அடுத்த மாதத்திற்குள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் அடுத்த மாதத்திற்குள் 1000 புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் வட பிராந்திய பொறுப்பதிகாரி வி.யோகேந்திரன் தெரிவித்தார்.

தற்போது தொலைபேசி இணைப்புக்கோரி யாழ்.மாவட்டத்தில் 13 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருக்கின்றனர். இவர்களில் அநேகமானோர் ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் கேபிள் இணைப்புகள் அற்ற இடங்களில் உள்ளவர்கள் என்றும் தெரிவித்தார்.

தற்போது புதிதாக 1000 தொலைபேசிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தொலைபேசி இணைப்பு கோரி விண்ணப்பித்தவர்களின் ஒழுங்குமுறைப்படி 1000 தொலைபேசி இணைப்புகள் புதிதாக வழங்கப்படவுள்ளது.

கேபிள் இணைப்பு அற்ற இடங்களில் உள்ளவர்களுக்கு மொபிடெல் மற்றும் ரேடியோ மூலம் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம் —

புதிதாக நியமனம் பெற்ற முகாமைத்துவ உதவியாளர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது. (24)

## கணேசா முன்பள்ளி விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம் —

பன்னாலை கணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நிலையத்தலைவர் சி.வேலாயுதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் சி.சிவமகாராசா மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலய அதிபர் க.சிவராஜன், சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி சி.செல்வவிநாயகர், பன்னாலை கிராம அலுவலர் ச.சிவகுமார், இளவாலை குடும்ப முன்பள்ளி தலைவர் மா.தேவராசா, தெல்லிப்பளை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செ.செல்வரஞ்சனா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நல்லூர் பிரதேச சபை நடத்தும் இரு நாள் கலாசார விழா

யாழ்ப்பாணம் —

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை நடத்தும் கலாசார விழா நல்லூர் பிரதேச சபை செயலக கலாசார பேரவைத் தலைவர் சு.தெய்வேந்திரன் தலைமையில் நாளையும், நாளை மறுதினமும் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்திரனராக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கௌரவ விருந்தினராகவும், யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பரீட்சைப் பெறுபேற்றை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம் —

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய 2004 ஆம் ஆண்டு ஆசிரியர்களுடைய இறுதித் தேர்வுப் பெறுபேறு பரீட்சைத் திணைக்களத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், கலாசாலை நேரத்தில் இதனைப் பார்வையிடலாம் என கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

## அலங்கார உற்சவம்

உடுவில் —

சுதுமலை தெற்கு அண்ணாமலை வீதியில் உள்ள அருள்மிகு வேல்முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகின்றது.

தினமும் பகல் திருவிழா 12 மணிக்கும், மாலைத் திருவிழா இரவு 7 மணிக்கும் ஆரம்பமாகும். எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் தீர்த்த உற்சவம் நடைபெறும். (101)

## புத்தக வெளியீடும் மாணவர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம் —

மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம் நடத்தும் புத்தக வெளியீடும், மாணவர் கௌரவிப்பு நிகழ்வு நாளை மாலை 3.30 மணியளவில் சென்யோசப் மகா வித்தியாலய மண்டபத்தில் வி.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி க.தனபாலசிங்கம், யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பு.ரவிராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# யாழ்.பல்கலை ஊழியர்கள் பிரதான வாயிலை மறித்து ஒருமணி நேர போராட்டம்




யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தமது சம்பள முரண்பாட்டைத் தீர்க்குமாறுகோரி நடத்திவரும் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்று யாழ்.பல்கலைக்கழக பிரதான வாயிலை மறித்து சுமார் ஒரு மணிநேரம்வரை எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு வார காலமாக பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தமது சம்பள முரண்பாட்டைத் தீர்க்குமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும், துணைவேந்தருக்கும் தெரிவித்தபோதும் அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால் தற்போது தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, தமது போராட்டத்தின் ஒரு கட்டமாக நேற்று 10.30 மணியில் இருந்து யாழ்.பல்கலைக்கழக பிரதான வாயிலை மறித்து சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் அவர்களின் தொடர்வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கண்காணிப்புக் குழுவினருடன் அம்பாறையில் புலிகள் சந்திப்பு!

கல்முனை —

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறையினருக்கும்- மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நீண்டகால இடைவெளியின் பின்னர் நேற்று நடைபெற்றது.

தம்பிலுவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலான விடுதலைப் புலிகளும், மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் புத்தி எரிக்சன் தலைமையிலான போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்கால நிலவரம் குறித்து இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தகவல் தெரிவிக்கையில் -

போராளிகள் மீது குறிப்பாக விசேட அதிரடிப்படையினர் பெரும் கெடுபிடிகளைக் காட்டிவருவது தொடர்பாகவும், சோதனைச்சாவடிகளில் போராளிகள் மீதான தாக்குதல்கள் மற்றும் அண்மைக்காலமாக அரசியற்துறை பணிமனைகள் மீது எவ்வித காரணமுமின்றி மேற்கொள்ளப்பட்டுவரும் கெடுபிடிகள், சோதனைகள் குறித்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்ததாகக் கூறினார்.

அரசியற்துறை அலுவலகங்கள் மீது படையினருடன் இணைந்து செயற்படும் தேசவிரோத குழுக்கள் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு படையினரின் முகாம்களுக்கு தப்பிச் சென்றுவிடுவது குறித்து இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்து படைத்தரப்பின் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவருவதாகவும், அத்துடன், விரைவில் படையினருக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்வதாகவும் கண்காணிப்புக்குழுவின் மாவட்டத் தலைவர் இந்தச் சந்திப்பின்போது உறுதியளித்தார்.

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக அம்பாறையில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு—

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக அம்பாறையில் இன்று பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தின் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தீர்மானத்துக்கமைய, 23 ஜும்மா பள்ளிவாசல்களில் தொழுகைக்குப் பின்னர் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

அத்துடன், பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டமை காரணமாக முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டமை தொடர்பில் உரைகளும் இடம்பெறவுள்ளதாக அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன பொருளாளர் வை. எல். ஹபீப் மொஹமட் தெரிவித்தார்.

இதேவேளை, திருமலை நகரப் பகுதியிலும் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (01)

## 3 ஊர்காவல்...

சலாகே சமிந்த பால (வயது 20) ஆகிய இந்த மூவரும் கடந்த மே மாதம் 23 ஆம் திகதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிப் போராளிகளால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உளவுபார்க்கும் நோக்கத்துடன் இந்தப் பிரதேசத்துக்குள் பிரவேசித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில், தமிழீழ காவல்துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட இந்த மூவரும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கொக்கட்டிச்சோலையில் உள்ள மாவட்ட நீதிமன்றில் நேற்று இவர்கள் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டபோது - இவர்களின் குடும்ப நிலைமையைக் கருத்திற்கொண்டு இவர்களை விடுதலை செய்வதற்கான உத்தரவை நீதிவான் யோகன் பாதர் பிறப்பித்தார்.

## 4 ஈழத்...

களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்பட்டதா என்பதை அறிவதற்கே பலரும் தொலைத்தொடர்பு நிலையங்களை மொய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற...

அமைந்திருந்த பிரதேசத்தின் அனைத்து இடங்களும் சுற்றி வளைக்கப்படும் வகையில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 12 பொலிஸ் வீதித் தடைகளும் அந்த இடத்தில் போடப்பட்டிருந்ததாக வும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மகேன் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸாரைவிட இராணுவத்தின் விசேட படைப்பிரிவும் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

## கருணா...

நேற்றுக் காலை இவரது சடலத்தைக் கண்டுபிடித்த பொலிஸார் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

கருணா குழுவைச் சேர்ந்த இவரது சகோதரனான நிஜந்தன் என்பவரும் கடந்த ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முத்தலிப்...

ரி - 56 ரக துப்பாக்கி 01, அதற்கான மகசீன்கள் 3, தோட்டாக்கள் 80, மைக்கிரோ ரக பிஸ்டல் 01, அதற்கான மகசீன்கள் 03, தோட்டாக்கள் 25 மற்றும் இரண்டு கைக்குண்டுகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டன.

## மனிதனின்...

வைத்திய பரிசோதனை மத்திய நிலையத்தின் ஒற்றுமைப் பிரிவுப் பிரதம அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்த நோய் அதிக அளவில் இல்லாவிட்டாலும் இது பரவுவதற்கான ஆபத்து உள்ளதென வைத்திய நிபுணர் சாகரிகா சமரசிங்க தெரிவித்துள்ளார்.

## கண்காணிப்புக்குழுத்...

கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் அபயகுணவர்த்தனவையும் பகல் 12.30 மணியளவில் திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரியவையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்பின்னர் பிற்பகல் 2 மணியளவில் திருமலை கடற்படைத் தளத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இன்று காலை மூதூருக்குச் செல்லும் ஹக்ரப் ஹொக்லன்ட் - விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடல்களை நடத்துவாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (10-04)

## லண்டனில் தொடர்...

ரயில்களில் அரைமணிநேர வித்தியாசத்தில் ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெற்றன.

எட்ஜ்வேர் சாலை என்ற ரயில் நிலையத்தில் நடந்த தாக்குதல், சுரங்க ரயில் பாதையின் சுவரில் ஒரு பெரிய துவாரத்தை ஏற்படுத்தி, இடிபாடுகளை பக்கத்தில் உள்ள மற்றொரு இரும்புப்பாதை மேல் தள்ளி, மேலும் இரண்டு ரயில்கள் மீதும் சேதத்தை ஏற்படுத்தியது.

நான்காவது குண்டு வெடிப்பு, நகரின் மையத்தில் ஒரு பஸ்ஸில் இடம்பெற்றது.

காலை 8.51 இற்கும், காலை 9.47 இற்கும் இடையில் நடந்த நான்கு குண்டுத் தாக்குதல்களிலும் கொல்லப்பட்டோர் தொகை 40 இற்கும் அதிகமெனச் செய்திகள் கூறுகின்றபோதும்- 37 பேர் கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் பொலிஸார் உறுதிசெய்தனர்.

சுமார் 60 பேர் வரை மோசமான காயங்களுடன் ஆபத்தான நிலையில் உள்ளனர். மேலும் சுமார் 700 பேர் வரை காயமடைந்ததாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவங்களையடுத்து பாதாள ரயில் சேவை அனைத்தும் நேற்றைய நாள் முழுவதும் இடைநிறுத்தப்பட்டன.

ஒரு நாளைக்கு 30 லட்சம் பேர் பயன்படுத்தும் இந்தச் சேவை இன்றே ஆரம்பமாகும் என்று பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மத்திய லண்டன் பஸ்கள் நேற்று பெரும்பாலான சேவைகளை நடத்தவில்லை. லண்டனுக்கு உள்ளேயும், வெளியேயும் தேசிய பஸ் சேவைகளும் பாதிக்கப்பட்டன.

லண்டனையும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் தரை ரயில் சேவை நிலையங்கள் பலவும் மூடப்பட்டிருந்தன.

லிவர்பூல் ஸ்ரீட், விக்டோரியா, கிங்ஸ்குரோஸ், இயூஸ்டன் உட்பட பல ரயில் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

தலைநகருக்கு வெளியே உள்ள சில நகரங்களின் நிலையங்களும் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் லண்டன் விமான நிலையங்கள் தொடர்ந்து செயற்பட்டன.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இஸ்லாமிய தீவிரவாதிகளே காரணமென பிரிட்டிஷ் பிரதமர் குற்றம்சாட்டியுள்ளார். அத்துடன் பல்வேறு நாடுகளும் இந்தச் சம்பவங்களைக் கண்டித்துள்ளன. எனினும் இத்தாக்குதலை தாமே நடத்தியுள்ளதாக அல் கொய்டா உரிமை கோரியுள்ளது.

## இராணுவக் கப்டனுக்கு பணம்...

நடவடிக்கையின் பின்னணியில் இருப்பதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இந்த இருவரும் இராணுவத்தின் முன்னாள் தளபதியின் மகனான இராணுவக் கப்டனைச் சந்திப்பதற்கு இரத்மலானை இராணுவ முகாமுக்கு பல தடவை சென்றுள்ளதுடன், அங்கு அவர்கள் மது அருந்தியபடி இந்த விடயம் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர் மற்றும் இராணுவக் கப்டன் ஆகியோருக்கிடையே இரண்டு மாதங்களுக்கு முன்னர் இராணுவ மோட்டார் சைக்கிள் படையணி குறித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதுடன், அடுத்துவரும் சில நாட்களில் அவற்றைச் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த இராணுவக் கப்டன் இராணுவ மோட்டார் படையணியில் கடமையாற்றுகின்றார். இவர் முன்னர் இரத்மலானை முகாமிலிருந்து இடமாற்றத்தைப் பெற்று மின்னேரிய இராணுவ முகாமுக்கு சென்றுள்ளார். பின்னர் ராஜனும், சிங்கள வர்த்தகரும் மின்னேரிய இராணுவ முகாமுக்கு பல தடவைகள் சென்று இவரைச் சந்தித்து 50 லட்சம் ரூபா குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

பொலிஸ் விசாரணை தகவல்களின்படி - விடுதலைப் புலிகளால் இராணுவ கப்டனுடனான ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்கு பரிகாரமாக சிங்கள வர்த்தகருக்கு 10 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. ராஜனும் மற்றும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சிலரும் இரத்மலானையிலுள்ள இந்தச் சிங்கள வர்த்தகரின் வீட்டில் சிலகாலம் தங்கியிருந்து பல தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டுள்ளனர்.

இராணுவத்தின் முதலாவது உளவுப் பிரிவு கட்டளை அதிகாரி லெப். கேணல் முத்தலிப்பை கொல்வதற்கான திட்டம் ராஜன் குழுவினராலேயே தீட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சிங்கள வர்த்தகருக்குச் சொந்தமான இரத்மலானையில் அமைந்துள்ள பிஸ்கட் தொழிற்சாலையில் வேலைசெய்யும் பண்டாரகமவில் வசிக்கும் பெண் கொடுத்த தகவல்களுக்கு அமையவே புலிகளின் நடமாட்ட இடங்கள் குறித்து அனைத்து விபரங்களும் வெளியாகின என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (தே)

## சமாதானப் பேச்சுக்கான வாய்ப்பு...

ஏனெனில், சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதற்கான எந்த விதமான சாத்தியப்பாடான சூழ்நிலைகளும் இன்று உருவாக்கப்படவில்லை.

முக்கியமாக போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்ட இலங்கை அரசு அதனை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறுபட்ட நெருக்கடிகளை உருவாக்கியிருக்கிறது.

குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கருணாகுழு என்றும், ஆயுதக் குழுக்கள் என்றும்கூறி இராணுவ புலனாய்வு அமைப்பால் மேற்கொள்ளப்படும் படுகொலைகளால் விடுதலைப் புலிகள் அவர்களுடைய ஆதரவாளர்கள், மக்கள் என்று பலரும் உயிரிழந்துகொண்டிருக்கின்றனர். இது யுத்தநிறுத்த உடன்பாட்டைக் கேள்விக்குறியாக்கும் ஒரு நிகழ்வாக இருக்கின்றது.

அடுத்தது மிக முக்கியமாக இந்த உடன்பாட்டின்படி மக்களுக்கான ஒரு இயல்புநிலை கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும். இராணுவ நெருக்குவாரங்கள் தணிந்து இராணுவம் மக்கள் குடியிருப்புக்களிலிருந்து அகன்று மீள மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டிருக்க வேண்டும். பல்வேறுபட்ட நல்லெண்ண நடவடிக்கைகள் இயல்புநிலையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் இன்று முடிவடைந்திருக்கவேண்டும். ஆனால் இவை எதுவுமே நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் இன்று மக்கள் தங்களுடைய நியாயம், நீதியைக் கோரி தங்களுடைய இயல்பு வாழ்க்கையைக் கோரி போராட்டங்களை முன்னெடுப்பது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு போராடும் மக்கள் படைத்தரப்பால் கொல்லப்படுகின்றனர். இது யுத்தநிறுத்த உடன்பாட்டையே இன்று கேள்விக்குறியாக்கியிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச உதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கான உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்ட நிலையிலும் - இன்னும் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் அரச தரப்பிலிருந்து முன்னெடுப்பதாகத் தெரியவில்லை.

மக்கள் மிக ஏமாற்றம் அடைந்திருக்கின்ற இந்த நிலையில் பொதுக் கட்டமைப்பை சம்பிரதாயத்துக்கு ஒப்பமிட்டுவிட்டு இது சமாதான முன்னெடுப்புக்களுக்கான ஒரு உகந்த சூழ்நிலை உருவாகிவிட்டது என்று சொல்வதை நாங்கள் கேலிக்கூத்தான விடயமாகத்தான் பார்க்கிறோம்.

சமாதான முயற்சிக்கான எந்த சூழ்நிலையும் இப்போது உருவாகவில்லை என்பதுதான் விடுதலைப் புலிகளுடைய நிலைப்பாடு.

கேள்வி:- இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவ தற்கான சாத்தியங்கள் உள்ளனவா?

பதில்:- யுத்தநிறுத்த உடன்படிக்கை, பொதுக்கட்டமைப்பு என்பன ஏற்கனவே இரண்டு தரப்பாலும் உடன்பாடு காணப்பட்டு - உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட விடயங்களே. இவைகூட நடைமுறைப்படுத்தாமல் இருக்கும்போது நாங்கள் இடைக்கால தன்னாட்சி சபையைப் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை.

ஆகவே இவை நடைமுறைக்கு வந்து சீரான ஒரு நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில்தான் நாங்கள் அடுத்த கட்டமாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேசலாம்.

ஆனால் ஏற்கனவே உடன்பாடு காணப்பட்ட விடயங்களை இலங்கை அரசுதரப்பு உதாசீனப்படுத்தி விட்டு அடுத்தகட்டத்துக்கு போவதென்பது அது யதார்த்தத்துக்கு புறம்பானது., நடைமுறைச் சாத்தியமற்றது.

ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் இலங்கை அரசு அதன் காத்திரமான செயற்பாடுகளூடாகத்தான் இந்த நிலைமைகளை மாற்றலாம். அதற்கான சூழல் இன்று இல்லை. ஒரு மிகப்பெரிய நெருக்கடியை நோக்கியே நிலைமைகள் சென்றுகொண்டிருப்பதாகவே தெரிகிறது. இன்றைக்கு அந்த நெருக்கடிக்கான சூழல் மிகவேகமாக உருவாகி வருகின்றது என்றுதான் நான் நினைக்கிறேன்.

ஜனாதிபதிக்கு புலிகளுடைய ஆதரவு இருக்கிறதென்ற கதை அவர்களுக்கென அவர்களே உருவாக்கிக் கொண்டது. இதில் எதுவித உண்மையுமில்லை.

ஏனெனில் எங்களுடைய மக்கள் ஒரு துன்பமான வாழ்க்கையை ஒரு பெரிய வாழ்வியல் நெருக்கடியில் சந்தித்து நிற்கிறார்கள். அதற்கு எந்தத் தீர்வையும் முன்வைக்காது, ஏற்கனவே உடன்பாடு காணப்பட்ட விடயங்களைக் கூட உதாசீனப்படுத்தி இன்றைக்கு நடைமுறைக்குக் கொண்டுவராமல் விட்டுவிட்டு வாக்குறுதிகளை மட்டும் அள்ளிவீசுவதால் பயனேதுமில்லை.

இவற்றால் தமிழ்மக்களோ, விடுதலைப் புலிகளோ திருப்தியடைந்து விடமாட்டார்கள்.

எவையுமே நடைமுறைக்கு வந்து அதனூடாக ஒரு நல்லெண்ணத்தை, நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் ஊடாகத்தான் ஆதரவையோ, ஒத்துழைப்பையோ எதிர்பார்க்கலாம்.

ஆனால் இன்று அந்தச் சூழல் இல்லை. இது ஒரு நகைப்புக்கிடமான கருத்தாகத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

எங்கள் போராளிகளின் பாதுகாப்பான பயணங்கள் பற்றி இரு வார காலக்கெடு கொடுத்திருந்தோம். இதுவரை ஒருவாரம் முடிந்த நிலையிலும் இன்னும் எங்களுக்கு எந்தவிதமான சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை.

நிச்சயமாக நாங்கள் - ஏற்கனவே அறிவித்ததன்படி போராளிகள், பொறுப்பாளருக்கு பாதுகாப்பான பயண ஒழுங்குகள் ஏற்படுத்தப்படாது விடின் சுயமான பாதுகாப்பு ஏற்பாடுகளின்படி எங்களுடைய போக்குவரத்து ஒழுங்குகளை ஏற்படுத்திக்கொள்வோம்.

அதனால் வருகின்ற விளைவுகளை அரசாங்கம் சந்திக்கத் தயாராக வேண்டும்.

நிச்சயமாக அப்படியான முயற்சிகளும், அப்படியான செயற்பாடுகளும் ஒரு நிலையைக் கொண்டுவருவதுடன் - இந்த யுத்தநிறுத்த சூழலை இல்லாதொழிக்கும் ஒன்றாக அமைந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.